
உ

குருபாதம்.

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 41] துன்மதி ஆண்டு சித்திரைத்திங்கள் 10-5-82 [இதழ் 6



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

குருபூஜை விழா 12—6—82

தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

“ஞானசம்பந்தம்”

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 41 || 10–5–82 || இதழ் 6

உட்பொருள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

...[★]...

அன்றுமுதல் இன்றளவும்
மேலும் அடியேனுக்(கு)
என்றுநீ நன்மைசெய்வ
தன்றிநான் — ஒன்றேனுஞ்
செய்யுமா(று) எங்ஙன்
சிவனே இனிநாயேன்
உய்யுமாறு எங்ஙன் உரை.

—சொக்கநாத வெண்பா. 88.

ஆசிரியர் :-

வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
சி அருணைவடிவேல் முதலியார்

ஆண்டுச் சந்தா உள்நாடு ரூ. 10
ஆண்டுச் சந்தா சிலோன் ரூ. 23
ஆண்டுச்சந்தாவெளிநாடு ரூ. 25
ஆயுள் சந்தா உள்நாடு ரூ. 100
ஆயுள் சந்தா வெளிநாடு ரூ. 250



உ
குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

ஸ்ரீ ஞானம்பிகை உடனுகிய ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி
திருக்கோயில்

பெருவிழா அழைப்பிதழ்

பெருங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான் ஆன்மாக்கள்மீது வைத்த எல்லையிலாப் பெருங்கருணையினுலே காணுத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய் நிகழ் குறியாம் சிவலிங்கமாதி திருவுருக்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற தலங்கள் பலவற்றுள் இந்திரன், அகத்தியர், தருமன் ஆகியோர்களால் பூசிக்கப்பெற்றதும், காவிரி முதலிய தீர்த்தங்களால் சிறப்புற்றதும், வில்வாரண்யம் என்னும் திருநாமம் உற்றதும் ஆகிய சிறப்புக்களை உடையது தருமபுரம். இத்தலத்தில் ஸ்ரீ ஆலவாய்ச் சொக்கநாதப் பெருமான் திருவருளையும், கமலை ஸ்ரீ ஞானப்பிரகாசதேசிகர் அருளையும் நிரம்பப்பெற்றுத் திகழ்ந்த ஸ்ரீ குருஞானசம்பந்ததேசிக பரமாசாரிய சுவாமிகள், தம் குருமூர்த்திகளது அருளாணையின்படி சைவ பரிபாலனம் என்றும் நிகழ்ந்துவருவதற்குரிய ஞானபீடத்தை இங்கு நிறுவி வீற்றிருந்து, ஜீவமாதி கூடிய கோயிலே ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில். இதன்கண் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஞானம்பிகை உடனுகிய ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமிக்கு, துன்மதி ஆண்டு வைகாசித்திங்கள் 20 ஆம் நாள் (3—6—1982) வியாழக்கிழமை தொடங்கிப் பெருவிழா நடைபெறும்.

இந்நாட்களில் திருநெறிய தெய்வத் தமிழ்மாநாடும், சமயப் பயிற்சி வகுப்பும் நடைபெறும். சிவநேசச் செல்வர்கள் யாவரும் வந்திருந்து திருவிழாக்காட்சியைத் தினமும் தரிசித்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் நலம் பெறுவார்களாக.

திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனம்

தருமையாதீனம் மடாலயம்,
துந்துபி—வைகாசி.
} கார்பார் சொக்கநாதத்தம்பிரான்

உ
சிவமயம்

தருமையாதீனத்தை நிறுவியருளிய

ஸ்ரீ ஆதிபரமாசாரியமூர்த்திகள் சரிதம்

பாண்டிய நாட்டில் ஸ்ரீ வில்லிபுத்தூரில் கார்காத்த வேளாள மரபில் ஸ்ரீ சுப்பிரமணியப் பிள்ளை மீனாட்சியம்மை என்னும் பெற்றோர்களுக்கு அரும்பெறற் புதல்வர் ஒருவர் சோமவார சுபதினத்தில் தோன்றினார். பிள்ளைத்திருநாமம் ஞானசம்பந்தர் என்பது. இளமையிலேயே கல்வியில்குறைவிலாது நிரம்பினார். பெற்றோர் தம் ஆன்மார்த்த மூர்த்தியாம் ஸ்ரீ சொக்கலிங்கத்தை வழிபட மதுரை சென்றபொழுது உடன் சென்ற ஞானசம்பந்தர் "உண்மை அம்மை அப்பர் அங்கயற்கண்ணியும் ஆலவாய் அரனுமே" என்று சொல்லிப் பெற்றோருடன் ஊர்திரும்ப மறுத்து மதுரையிலேயே இருந்தார்.

நாள்தோறும் பொற்றாமரைத் தீர்த்தத்தில் மூழ்கிக் காலந் தோறும் ஸ்ரீ சொக்கநாதரை வழிபட்டுவந்தார். பொற்றாமரைத் தீர்த்தக் கரையில் சிவனடியார் பலர் நீராண்ட புரோதாயம் ஆடி, தூய வெண்ணீறு துதைந்த பொன்மேனியும் தாழ் வடமும் உடையவர்களாய் நாயகன் சேவடி தைவரும் சிந்தை யுடன் அமர்ந்து நைந்துருகும் அன்போடு சிவபூஜை செய்தனர். அவ்வடியார்களது செயலில் ஒருநாள் ஞானசம்பந்தரதுஉள்ளம் ஈடுபட, முற்பிறப்பின் பூஜை உணர்வு அவருக்கு முகிழ்த் தெழுந்தது. ஆலவாய் அப்பனை, ஆன்மார்த்த மூர்த்தியாகப் பூஜிக்க அளவிலா ஆர்வங்கொண்டு அப்பெருமானைவேண்டி னார். அப்பெருமான் அவரது கனவில் தோன்றி, "முற்பிறப்பில் உன்னால் பூஜிக்கப் பெற்றுவந்த நாம் பூஜைப்பெட்டகத்துடன் பொற்றாமரைத் தீர்த்தத்துள் ஈசானத்திசையில் இருக்கிறோம்; மூழ்கிப் பெறுக" என்று அருளிச்செய்தார். ஞானசம்பந்தர், அங்ஙனமே மறுநாள் பொற்றாமரைத் தீர்த்தத்தில் மூழ்கி, ஆன்மார்த்த மூர்த்தியைப் பெற்று ஆனந்தபரவசம் உற்றார். பின்னர், ஸ்ரீ சொக்கநாதர் சந்நிதியில் சென்று "பெருமானே! பூசிக்கும் நெறியை அருள்புரியவேண்டும்" என்று வேண்டினார். அன்று இரவு பெருமான் கனவில்தோன்றி, "திருவாரூர் ஞானப் பிரகாசரிடம் ஞானோபதேசமும் சிவபூஜையும் பெறுக" என்று

பணித்தருளி ஞானப்பிரகாசரது கனவிலும்சென்று, " உன்னிடம் வருகின்ற நம் ஞானசம்பந்தனுக்கு விதிப்படி சிவஞானுேபதேசம்செய்து சிவபூஜையும்எழுந்தருளப்பண்ணிவைப்பாயாக" என்று சொல்லி மறைந்தருளினர்.

திருவாரூரில் சித்தீச்சரத்தில் தென்முகக்கடவுளின் திருமுன்பு சீடரின் வருகையை ஞானப்பிரகாசர் எதிர்நோக்கியிருந்தார். அருளாணையின்படி ஞானசம்பந்தர், கமலையை அடைந்து குருமூர்த்தியைக் கண்டதும், காந்தம் கண்ட இரும்புபோல் அவர்வசமாகி, சிவதீக்ஷையும், சிவபூஜையும் பெற்ருர். பின்பு அவர் நாள்தோறும் ஸ்ரீசொக்கலிங்கத்தைப் பூஜித்துப் பாடியதே சொக்கநாத வெண்பா. அவர் செய்த குருதோத்திரமே ஞானப்பிரகாசமாலை. ஒருநாள், ஞானப்பிரகாசர் பூங்கோயில் வழிபாட்டினை முடித்து மீள்கையில், கைவிளக்கு எடுப்போன், அங்கு இல்லாமைகண்டு, ஞானசம்பந்தர் தாமே அப்பணியினை மேற்கொண்டு செல்ல, சிவத்தியான உள்ளத்துடன் இல்லம் செல்லும் குருமூர்த்திகள் இல்லத்தை அணுகியபொழுது "நிற்க" என்று சொல்லி உள்ளே சென்ருர். குருவாணை கடவாத ஞானசம்பந்தர் கைவிளக்கோடு வெளியிலே நின்றிருந்தார். மழை வந்தது. ஓர் அடியும் அப்புறம் பெயர்ந்திலர். மழை அவருக்கு மூன்றடி அப்பாற்சூழ்ந்தே பெய்தது. மறுநாட்காலையில் குருபத்தினியார் கண்டார். குருமூர்த்திகள் கேட்டு வந்து, 'நீர் குவலயத்திற்கு உண்மை விளக்கும் குருவாயினீர்; தனியிடத்தில் இருந்து உம்மைநாடி ஓடிவரும் காரணர்க்கு உண்மை வைத்துச் சமய பரிபாலனம் புரிக' என்றருளினர். சீடர்,

" கனக்கும் பொதிக்கும்எருதுக்கும்தன்னிச்சை கண்டதுண்டோ
எனக்கும் உடற்கும் எனதிச்சையோ? இணங்கார்புரத்தைச்
சினக்கும் கமலையுள் ஞானப்பிர காச சிதம்பர இன்று
உனக்கிச்சை எப்படி? அப்படியாக உரைத்தருளே".

என்று வேண்டினர். அதுகேட்டுக் குருமூர்த்திகள் 'தருமபுரம் செல்க' எனப் பணித்தருளினர்.

ஞானசம்பந்தர் அன்றுமுதல் குருஞானசம்பந்தராகித் தருமபுரத்தை அடைந்து சமய பரிபாலனம் புரிந்தார்; ஞானநூல்கள் பல அருளினர்; ஆனந்தபரவசர் முதலிய பலர்வழி ஞான பரம்பரையை உலகில் நிலவச் செய்தருளினர். அவரே தருமபுர ஆதீன ஞானபீடத்தின் ஆதிபரமாசாரிய மூர்த்திகள்.

திருநாள் விபரம்

வைகாசி ௴

தமிழ்த் தேதி	ஆங்கிலத் தேதி	கிழமை	திரு நாள்	விபரம்
18	1—6—82	செவ்வாய்		காலை கணபதிஹோமம். நவக்கிரகஹோமம்.
19	2—6—82	புதன்		இரவு சித்திரைநக்ஷத்திரம்கூடிய சுபதினத்தில்மணி 9க்குமேல் 10க்குள் மகரலக்னத்தில்அனுக்ஞை விக்னேஸ்வரபூஜை, வாஸ்துசாந்தி, மிருத்ஸங்கிரஹணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம்.
20	3—6—82	வியாழன்	1	சுவாதிநக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் காலைமணி 9-க்குமேல் 10-க்குள் கடக லக்னத்தில் ஸ்ரீ ஞானம்பிகை உடனுகிய ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி மஹத்துவஜாரோஹணம்.
21	4—6—82	வெள்ளி	2	கற்பக விருக்ஷ்க் காட்சி.
22	5—6—82	சனி	3	பூதம், பூதகி, இடும்பவாகனக் காட்சி.
23	6—6—82	ஞாயிறு	4	நந்தி, காமதேனு, குதிரைவாகனக்காட்சி.
24	7—6—82	திங்கள்	5	சகோபுர ரிஷபவாகனக் காட்சி.

	25	8—6—82	செவ்வாய்	6	யானை, அன்னம், ஆட்டுக்கிடாவாகனக் காட்சி.
	26	9—6—82	புதன்	7	இரவு மணி 9க்குமேல் 10க்குள் மகரலக்னத்தில் திருக்கல்யாண வைபவம். புஷ்பவிமானம் வெள்ளிரதக் காட்சி.
	27	10—6—82	வியாழன்	8	குதிரை, கிளி, யானை வாகனக் காட்சி.
துந்துபி ௵	28	11—6—82	வெள்ளி	9	காலை மணி 8-க்குமேல் 9-க்குள் கடகலக்னத்தில் மஹாரதாரோகணம், திருத்தேர் வடம்பிடித்தல்.
	29	12—6—82	சனி	10	காலை ஸ்ரீ சபாநாயகர் தீர்த்தம் கொடுத்தருளல். பிறகு பஞ்சமூர்த்திகளும் ரிஷபாருடராய் எழுந்தருளிக் காவிரியில் தீர்த்தம் கொடுத்தருளல். இரவு துவஜாவரோகணம்.
	30	13—6—82	ஞாயிறு		மௌன உற்சவம்.
	31	14—6—82	திங்கள்		ஸ்ரீ சண்டேசுவரர் உற்சவம்.
ஆனி மீ	1	15—6—82	செவ்வாய்		காலை உற்சவப் பிராயச்சித்தாபிஷேகம். இரவு மணி 5-க்குமேல் 6-க்குள் விருச்சிகலக்னத்தில் பஞ்சமூர்த்திகள் யதாஸ்தானம்.

தருமையாதீனம் குருபூஜை விழா, சமயப்பயிற்சி வகுப்பு, நிகழ்ச்சி நிரல்

3 — 6 — 82 வியாழன் காலை 10 - மணி

தொடக்கவுரை :- திரு. வி. ஆறுமுகம்பிள்ளை I A. S. (ஓய்வு) மாயூரம்

நாள் கிழமை	முதல் வகுப்பு காலை 10 to 11	இரண்டாவதுவகுப்பு காலை 11 to 12	மூன்றாவது வகுப்பு பிற்பகல் 2-30 to 3 30	நான்காவது வகுப்பு பிற்பகல் 3-30 to 4 30
3-6-1982 வியாழன்	" சிவஞானபோதம் " திரு. க. வச்சிரவேல் முதலியார்	'உண்மை விளக்கம்' திரு. ந. ரா. முருகவேள்	வேதம் திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்	திருமுறைகள் - 1 - 7 திரு. சொ. சிங்காரவேலன்
4-6-82 வெள்ளி	"	"	மேல் நாட்டு சமய தத்துவங்கள் திரு. ஆர். பாலசுப்பிரமணியம்	திருமுறைகள் - 8 - 12 திரு. இரா. செல்வக் கணபதி
5-6-82 சனி	"	"	'ஆகமங்கள்' திரு. க. சுவாமிநாத சிவாசாரியார்	'கந்தபுராணம்' திரு. சொ. முத்தையன்
6-6-82 ஞாயிறு	" சிவப்பிரகாசம் " திரு. சி. அருணைவடிவேல் முதலியார்	'திருக்களிற்றுப் படியார்' திரு. கு. சுந்தரமூர்த்தி	"	'தாயுமானர்' திரு. மு. சிவச்சந்திரன்

7-6-82 திங்கள்	,,	,,	'புராணங்கள்' திரு. எஸ். வி. இராமகிருஷ்ண சாஸ்திரிகள்	திருவிளையாடற் புராணம் திருமதி. ப. நீலா
8-6-82 செவ்வாய்	,,	,,	,,	பண்டார சாத்திரங்கள் திரு. வி. சா. குருசாமி தேசிகர்
9-6-82 புதன்	'சிவஞானசித்தியார்' திரு. ச தண்டபாணி தேசிகர்	'திருவருட்பயன்' திரு. ப. அருணசலம்	'உபநிடதங்கள்' பி. இராமதாச ஐயர்	'தமிழக வரலாறும் கோயில்களும்' திரு. வே.மகாதேவன்
10-6-82 வியாழன்	,,	,,	,,	'சித்தமருத்துவம்' திரு. நா. தனுக்கோடி
11-6-82 வெள்ளி	,,	,,	'இதிகாசங்கள்' திரு. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்	'தலபுராணங்கள்' திரு. இராமலிங்கம்

உ

குருபாதம்

திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு

1. திருநந்திதேவர் திருநாள்

3—6—82 வியாழக்கிழமை] [மாலை 6-30 மணி

வரவேற்புரை :

வித்துவான்

வித்துவான் ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

கட்டளை விசாரணை, வேளூர் தேவஸ்தானம்.

சிறப்புரை :

மாண்புமிகு திருமதி. ரேணுகாஅப்பாதுரை

கல்வி, நல்வாழ்வுத்துறை அமைச்சர், புதுவைமாநிலம்.

விரிவுரை :

தருமையாதீனப்புலவர்,

திரு. ந. ரா. முருகவேள் எம். ஏ., எம். ஓ. எல்.,

ஆசிரியர், 'திருக்கோயில்' சென்னை.

— திருமுறைச் சிறப்பு

குடவாயில். திரு. எம். பாலசுப்பிரமணியம்

காப்பாளர், நுண்பாடப்பிரிவு, சரஸ்வதிமஹால். தஞ்சாவூர்.

— திருக்கோயிற் சிறப்பு

வயலின் இன்னிசை

வில் யாழ் இசை இளவரசர்,

செல்வன் D. சுவாமிநாதன்
செல்வன் D. பாலசுப்பிரமணியன் } குழுவினர்

சிதம்பரம்.

2. சனற்குமாரர் திருநாள்

4—6—82 வெள்ளிக்கிழமை] [மாலை 6-30 மணி

வரவேற்புரை :

வித்துவான் ஸ்ரீமத். சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்
தருமையாதீன சமயப் பிரசார நிலையம், சென்னை.

சிறப்புரை :

டாக்டர் திரு. ஆர். பாலசுப்பிரமணியம், எம். ஏ., பி. எச்டி.,
தத்துவத்துறைப் பேராசிரியர், சென்னைப் பல்கலைக் கழகம்.

விரிவுரை :

டாக்டர் திரு. ஔவை. து. நடராசன், எம். ஏ., பி. எச்டி.,
இயக்குநர், மொழிபெயர்ப்புத்துறை, சென்னை.

— இயற்றமிழ்

திரு. மா. வயித்திலிங்கம், எம். ஏ.,
பேராசிரியர், ஜி. டி. என். கலைக்கல்லூரி, திண்டுக்கல்.

— இசைத்தமிழ்

தெய்விக நடனம்

செல்வி T. R. மஞ்சுளா குழுவினர், மாயூரம்.

ஃ

3. சத்தியஞானதரிசனிகள் திருநாள்

5—6—82 சனிக்கிழமை] [மாலை 6-30 மணி

வரவேற்புரை :

வித்துவான் ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள்
கட்டளை விசாரணை, மௌனமடம், திருச்சிராப்பள்ளி.

சிறப்புரை :

திரு. எம். சோணமுத்துக்கோன்
மாவட்ட வருவாய் அலுவலர், தஞ்சாவூர்.

விரிவுரை :

தருமையாதீனப் புலவர்,

திரு. க. வச்சிரவேல் முதலியார், பி. ஏ., எல். டி.

காஞ்சிபுரம்.

— சாத்திர நூலாசிரியர்கள்

வித்துவான் திரு. சு. சாமிஐயா, எம். ஓ. எல்.

துணைப்பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.

— சாத்திர உரையாசிரியர்கள்

மெல்லிசை

சிதம்பரம், திரு. K. ஜெயராமன் எதிரொலி

திரு. K. பாலு குழுவினர், சிதம்பரம்.

4. பரஞ்சோதிமாமுனிகள் திருநாள்

6—6—82 ஞாயிற்றுக்கிழமை] [மாலை 6-30 மணி

வரவேற்புரை :

வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ.,

முதல்வர், ஆதீனப் பல்கலைக்கல்லூரி, தருமபுரம்

சிறப்புரை :

மாண்புமிகு திரு. க. இராசாராம், எம். ஏ.,

சட்டமன்றத் தலைவர், தமிழ்நாடு அரசு.

இன்னிசைத் தொடர் விரிவுரை

ஹரிகதா ரத்னகர, கலைமாமணி,

பிர்மஸ்ரீ T. S. பாலகிருஷ்ண சாஸ்திரிகள் குழுவினர்

சென்னை.

— விநாயகர் பெருமை

5. மெய்கண்டதேவர் திருநாள்

7—6—82 திங்கட்கிழமை] [மாலை 6-30 மணி

வரவேற்புரை :

செந்தமிழ்ச் சிவநெறிச்செல்வர்,
திரு. வை. ஆறுமுகம் பிள்ளை,
கௌரவப் பொதுச் செயலாளர்,
ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணி மன்றம், தருமபுரம்.

வாழ்த்துரை :

காஞ்சிபுரம், தொண்டைமண்டல ஆதீனம் குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

இன்னிசைத் தொடர் விரிவுரை

ஹரிகதா ரத்னகர, கலைமாமணி,
பிர்மஸ்ரீ T. S. பாலகிருஷ்ண சாஸ்திரிகள் குழுவினர்
சென்னை.

— துர்க்கை, லட்சுமி, சரசுவதி

❋

6. அருள்நந்திதேவர் திருநாள்

8—6—82 செவ்வாய்க்கிழமை] [மாலை 6-30 மணி

வரவேற்புரை :

செந்தமிழ்ப்புரவலர்
திரு. இரா. இராஜசேகரன், பி. எஸ்ஸி. பி. எல்.,
தலைவர், ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றம், மேலையூர் கிளை,
பூம்புகார்.

சிறப்புரை :

திரு. என். காசிராமன், பி. எஸ்ஸி.,
இராமன் அண்ட் ராமன், கும்பகோணம்.

இன்னிசைத் தொடர் விரிவுரை

ஹரிகதா ரத்னகர, கலைமாமணி,

பிர்மஸ்ரீ T. S. பாலகிருஷ்ண சாஸ்திரிகள் குழுவினர்

சென்னை.

— குருபக்தியும் பஞ்சாட்சர மகிமையும்

7. மறைஞானசம்பந்தர் திருநாள்

9—6—82 புதன்கிழமை] [மாலை 6-30 மணி

ஸ்ரீ ஞானம்பிகை உடனுகிய ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி
திருக்கல்யாணத் திருநாள்

வரவேற்புரை :

டாக்டர் திரு. மு. சுவாமிநாதன், எம். பி., பி. எஸ்.

மாயூரம்.

சிறப்புரை :

டாக்டர் திரு. பி. எஸ். மணிசுந்தரம்

துணைவேந்தர், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி

இன்னிசைத் தொடர் விரிவுரை

ஹரிகதா ரத்னகர, கலைமாமணி,

பிர்மஸ்ரீ T. S. பாலகிருஷ்ண சாஸ்திரிகள் குழுவினர்

சென்னை.

— உமாமகேசுவரர்திருமணம்

இரவு 8-30 மணி

ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில்

டாக்டர் திரு. வி. இராதாகிருஷ்ண சாஸ்திரிகள்

திருச்சிராப்பள்ளி.

— திருக்கல்யாணதத்துவம்

பொம்மலாட்டம்

மாயூரம் ஸ்ரீ கணநாதர் பொம்மை நாடகசபை.

— வள்ளித்திருமணம்

8. உமாபதிதேவர் திருநாள்

10—6—82 வியாழக்கிழமை] [மாலை 6-30 மணி

வரவேற்புரை :

வித்துவான் திருமதி. ப. நீலா, எம். ஏ.,
துணைப்பேராசிரியை, ஆதீனப் பல்கலைக்கல்லூரி, தருமபுரம்.

சிறப்புரை :

செந்தமிழ்ச்செல்வர்
திரு. கி. வா. ஜகநாதன், எம். ஏ.,
ஆசிரியர், 'கலைமகள்' சென்னை.

இன்னிசைத் தொடர் விரிவுரை

ஹரிகதா ரத்னுகர, கலைமாமணி,
பிர்மஸ்ரீ T. S. பாலகிருஷ்ண சாஸ்திரிகள் குழுவினர்
சென்னை.

— அப்பரும் அப்பூதியும்

9. அருள்நமச்சிவாயதேவர் திருநாள்

11—6—82 வெள்ளிக்கிழமை] [மாலை 6-30 மணி

வரவேற்புரை :

புலவர் திரு. இரா. செல்வக்கணபதி, எம். ஏ.,
துணைப்பேராசிரியர், ஆதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

வாழ்த்துரை :

குன்றக்குடி, திருவண்ணுமலை ஆதீனம் குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணுசல தேசிக
பரமாசாரிய சுவாமிகள்

(தவத்திரு. குன்றக்குடி அடிகளார்)

சிறப்புரை :

மாண்புமிகு. டாக்டர். திரு. கா். காளிமுத்து, எம்.ஏ.,பி.எச்டி
விவசாயத்துறை அமைச்சர், தமிழக அரசு.

இன்னிசைத் தொடர் விரிவுரை

ஹரிகதா ரத்னகர, கலைமாமணி,

பிர்மஸ்ரீ **T. S. பாலகிருஷ்ண சாஸ்திரிகள் குழுவினர்**
சென்னை.

— திருநாளைப்போவார்

✽

10. கமலைஞானப்பிரகாசர் திருநாள்

12—6—82 சனிக்கிழமை]   [காலை 8-00 மணி

குருபூஜைத் திருநாள்

வரவேற்புரை :

வித்துவான் திரு. மு. சிவச்சந்திரன், எம். ஏ.,
துணைப்பேராசிரியர், ஆதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

வாழ்த்துரை :

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம்,

ஸ்ரீமத். காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான்
சுவாமிகள்

சிறப்புரை :

திரு. ச. மெய்கண்டதேவன், ஐ. ஏ. எஸ்.
தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர்.

விரிவுரை :

திரு. மா. தனுக்கோடிபாண்டியன், பி. எஸ்சி., பி. எல்.
தாளாளர், மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை.

— குருவழிபாடு

தருமையாதீனப் புலவர்
மகாவித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர்
திருக்குறள் ஆராய்ச்சித்துறை,
மதுரை - காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

—சிவவழிபாடு

டாக்டர். திரு. A. V. ஜெயச்சந்திரன்
எம். ஏ., பி. எல்., பி. எச்டி.
இயக்குநர், அருங்காட்சியகம், திருப்பதி.

— அடியவர் வழிபாடு

குருபூஜைத் திருநாள்

12—6—82 சனிக்கிழமை] [மாலை 4-30 மணி

வரவேற்புரை :

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன், பி. லிட்.,
தமிழாசிரியர், ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்பள்ளி, தருமபுரம்.

சிறப்புரை :

டாக்டர் திரு. வி. அய். சுப்பிரமணியம்
துணைவேந்தர், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

விரிவுரை :

செந்தமிழ்ச்சிவநெறிச்செம்மல்
திரு. அ. சங்கரநாராயணன், எம். ஏ., பி. லிட்., பி. டி.
சித்தாந்தப்பேராசிரியர், தியாகராசர்கல்லூரி, மதுரை.

— **சைவசித்தாந்தமும் அறிவியல் எழுச்சியும்**

மாலை 6-30 மணி அளவில்

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிகஞானசம்பந்தபரமாசாரியசுவாமிகள்

குருமூர்த்த வழிபாட்டிற்கு எழுந்தருளல்

இரவு 8-30 மணி

இன்னிசை

திருமதி. ஆர். விஜயலட்சுமி எம். ஏ, பி. எல். **குழுவினர்**

மதுரை

✻

11. ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருநாள்

13—6—82 ஞாயிற்றுக்கிழமை] [காலை 7-00 மணி

சிவபூஜைபுரிதல்

சிவபூஜாதுரந்தரர் ஐம்பத்தொருவர்

காலை 9-00 மணி

வரவேற்புரை :

ஸ்ரீமத். நெல்லையப்ப சுவாமிகள்

தருமபுரம்.

சிறப்புரை :

டாக்டர் திரு. எஸ். ஆறுமுகம், எம். பி., பி. எஸ்.

முதல்வர், மருத்துவக் கல்லூரி, மதுரை.

விரிவுரை :

தருமையாதீனப் புலவர்

மகாவித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர்

திருக்குறள் ஆராய்ச்சித்துறை,

மதுரை, காமராசர் பல்கலைக் கழகம்.

— சிவபூஜை விளக்கம்

வித்துவான் திரு. தா. குருசாமி தேசிகர்
மதுரை.

— *சிவபோகசாரம்*

திரு. பாலசுப்பிரமணியம்
செயலர், ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணி மன்றம், கோயம்புத்தூர்.

— சொக்கநாதவெண்பா

வித்துவான் திரு. சி. குமரேசன்
செயலர், ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றம்
சுசீந்திரம்.

— ஞானப்பிரகாசர் கலித்துறை

புலவர் திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ.,
தருமபுரம்.

— ஞானப்பிரகாசமாலை

வித்துவான் திரு. மு. வைத்தியநாதன்
திருச்சிராப்பள்ளி.

— *முத்திநிச்சயம்*

காலை 11-00 மணி அளவில்

ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் வழிபாடு

நண்பகல் 1-00 மணி

மாகேசுவரபூஜை

பட்டினப்பிரவேசத் திருநாள்

13—6—82 *ஞாயிற்றுக்கிழமை]* *[மாலை* 6-00 மணி

சமயப்பயிற்சி வகுப்பு நிறைவு விழா

சமயப் பயிற்சியாளர்கட்குச் சான்றிதழ் வழங்குதல்

வரவேற்புரை :

அறப்பணிச்செல்வர்

டாக்டர் திரு. K. அரங்கசாமி பிள்ளை எம். பி; பி. எஸ்.

சிதம்பரம்

சிறப்புரை :

திரு. மீ. ப. சோமசுந்தரம்

தமிழ்ப் பழங்கலை இயக்குநர், சென்னை.

விரிவுரை :

தருமையாதீனப் புலவர்

டாக்டர் திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., பி. எச்டி.

பேராசிரியர், அ. வ. அ. கல்லூரி, மாயூரம்.

— குருபரம்பரை

சான்றிதழ்வழங்குதல் :

திரு. துளசிஐயா வாண்டையார்

பூண்டி.

இரவு 7-00 மணி

இன்னிசை

தருமையாதீன இசைப்புலவர், இசைமணி,

சீகாழி திரு. எஸ். கோவிந்தராஜன் - குழுவினர்

இரவு 10-00 மணி

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிகஞானசம்பந்தபரமாசாரியசுவாமிகள்

பட்டினப்பிரவேசம்

தவச்செங்கோல் தழைத்து வாழி!

புலவர் திரு. ஆ. தம்பிரான் முதலியார் பி. ஏ.,
திருஓத்தூர்.

1. தமிழ்மணக்கும் தருமபுர மடாலயத்துத்
தமிழ்த்தொண்டு சிறந்து வாழி
அமிழ்தெனவே அருள்ஞானம் அள்ளிவீசும்
அருந்திங்கள் இதழும் வாழி
இமிழ்கடலு லகந்தன்னில் இருந்தமிழின்
இனியசுவை என்றும் வாழி
தமிழ்வள்ளல் **சண்முகதே சிகப்பெருமான்**
தவச்செங்கோல் தழைத்து வாழி.

2. வாலறிவன் வடிவாகும் பரசிவத்தை
நாடோறும் உள்ளம் வைத்து
சீலமது வழுவாத செந்நெறியைக்
காட்டுகின்ற தெய்வச் சான்ருேய்
பாலமுதூட் டும்தாய்போல் பாவலரைப்
பாராட்டிப் போற்றும் வண்ணம்
கோலமிகும் வண்மையைக் குறைவின்றி
அருளுகின்ற குணமே வாழி.

3. அருளினெடு அகமலரப் புறம் தோன்றும்
அருண்முகத்தைக் கண்டால் போதும்
ஒருகுறையும் இல்லாமல் சிவநெஞ்சம்
ஓதிவரும் உணர்வை நாடி
உருகுகின்றேன் உமையன்பர் அருள்பலத்தால்
திருநீற்றின் பெருமை ஓங்கத்
தருமபுர மடாலயத்தின் தவச்செங்கோல்
தழைக்கச்செய் தேவே வாழி.

4. சிவத்தொண்டே சீரிதென்று சிவநெறியைச்
சீலத்தால் தெரித்துக் காட்டும்
பவம்மாய்க்கும் பெருநெறியே பீடென்று
பனைகாய்த்தே பழமாய் வீழும்

நவம்புரியும் தமிழ்ஞான சம்பந்தன்
நயந்தபாடல் பத்தும் ஓதிச்
சிவம்மணக்கும் வேதநாதன் சீரடியே
தஞ்சமென்று உணரப் பெற்றேன்.

5. நற்றமிழால் ஞானசம்பந் தன்புகழை
நல்லேட்டில் தெளிக்கச் செய்து
பற்றுள்ளம் தமிழரிடை பரப்பிநிதம்
பெரியதொரு ஒருமைப் பாட்டைக்
கற்றறிந்த பயனுணர வைத்திட்டீர்
கடமையைக் காட்டிநின்றீர்
சொற்றிருவே சண்முகதே சிகப் பெரும
சிவசமயம் சிறக்க வாழி.

உ

குருபாதம்.

ஞானசம்பந்தம்

மலர் 41 | துந்துபி - சித்திரை - 10—5—82 | இதழ் 6

திருச்சிற்றம்பலம்.

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்

திருச்சிற்றம்பலம்.

'குருவைப் பூசித்துக் குணநலம் பெறுவோம்'

திருவள்ளுவர் காட்டும் குரு :

'அகர முதல எழுத்தெல்லாம்' என உவமை காட்டிய திருவள்ளுவர், 'அதுபோல, உலகம் ஆதிபகவனை முதலாக வுடைத்து' எனக்கடவுள் உண்மைக்குப் பிரமாணம் கூறுவர். அடுத்தடுத்து வரும் குறட்பாக்களில் கடவுள் இலக்கணம் கூறவேண்டுவதே முறை ஆயினும் திருவள்ளுவர் இரண்டாவது குறளிலேயே மனிதர்களை நோக்கி ஒரு வினத்தொடுப்பார். கல்விக்கு உரிய பயன் எது என்ற கேள்விக்குப் பலர் பலவாறு விடை கூறுவர். திருவள்ளுவரோ 'அறிவுப் பிழம்பாகத் திகழும் இறைவனை அறிதலும், தொழுதலுமே கல்வியின் முடிந்த பயன் என்பார். இதனை,

" கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்ருள் தொழாஅ ரெனின்? "

என்ற இரண்டாம் குறட்பா அழகுற விளக்கும். இறைவனை அறிதலும், தொழுதலும் கல்வியின் முடிந்த பயனென்ருலும், மனிதர்கட்குக் கடவுளை அறிவித்து அவரைத் தொழவைக்கும் பெரியார் யார் என்ற வினு எழுதல் இயற்கை. குறள் இத்தகு பெரியாரை ' நீத்தார் ' எனக் குறிக்கும். நமது சைவ-சித்தாந்தச் சாத்திரங்களும், தோத்திரங்களும் அன்னுரைக் 'குரு' என்ற சொல்லாலே அறிவிக்கும். குருவைத் தமிழில் ஆசிரியர் என்பர். ஆசு—குற்றம் இரிதல் – போக்குதல். எனவே, குற்றங்கள் நீக்கிக் குண நலம் அருள்பவர் என்பது பொருளாம். இவ்வாசிரியர் வித்தியாகுரு, ஞானகுரு என இருவகைப்படுவர்.? உண்மை ஞானமாகியமெய்யுணர்விற்கு அடிப்படையானதும், சிவனடியே சிந்திக்க வைப்பதுமான உவமையிலாக் கலைஞானத்தைப் போதிப்பவர் வித்யாகுரு என்றும், பவ(பிறப்பு) மதனை அற மாற்றும் உணர்வரிய மெய்ஞ்ஞானத்தை உபதேசிப்பவர் ஞான குரு என்றும் பேசப்பெறுவர்

அஞ்ஞான நீக்கம் :

வடமொழி இலக்கணப்படி, ' கு ' என்ற எழுத்து 'அஞ் ஞானம் ' என்றும், ' ரு ' என்ற எழுத்து ' நீக்குபவன் ' என்றும் பொருள் தரும். எனவே, ' குரு ' என்ற சொல் அஞ்ஞானத்தை நீக்கி, மெய்ஞ்ஞானத்தை வழங்கும் ஞாஞசிரியனைக் குறிப்ப தாகவே கொள்ளப்படும். 'மாதா, பிதா, குரு, தெய்வம்' என்ற பழஞ் சொற்ருெடரில் மாதா அறிவிக்கப் பிதாவையும், பிதா வழிகாட்டக் குருவையும், குரு அறிவுறுத்தத் தெய்வத் தையும் அடையவேண்டுமென்ற முறைமை எளிதாக விளக்கப் பட்டுள்ளதைக் காணலாம். இத்தகு ஞானகுருமார்கள் தம் பார்வையால், வாக்கால், மனத்தால், ஸ்பரிசத்தால் நன்மாணுக் கர்களுக்கு ஞானேபதேசம் செய்து இறையருளில் கூட்டுவர் என்பது நமது சாத்திரமுடிபு.

இருவகை ஞானங்கள் :

கல்வி இருவகைப்படும். உலகியலை அறிய உதவும் கல்வி. உலகியலைக்கடந்த இறைவனை அறிய உதவும் கல்வி. முன்ன

-தைக் கல்விக்கூடங்களில் கற்கிறோம். இதனைக் கற்பிப்பார் வித்யா குரு' எனப்படுவர், பின்னது தக்க ஞானாசிரியர்கள் வாயிலாகக் குருகுலப்பயிற்சிவழிவருவது. இதனை உணர்த்துபவரே 'ஞான குரு' எனப்பெறுவார். மூன்றுவயது திருஞானசம்பந்தருக்கு உமையம்மையார் எண்ணரிய சிவஞானத்து இன்னமுதம் குழைத்து ஊட்டிய ஞானப்பால் உண்ட அளவில் மேற்கூறிய இருவகைக்கல்வியும்அவரைத்தாமேவந்தடைந்தன என்பர்சேக்கிழார். உலகியல் கல்வியாகிய 'உவமையிலாக்கலை ஞான'மும், இறைவனை உணர உதவும் 'உணர்வரிய மெய்ஞ் ஞானமும்' அவர்பெற்றனவாகப் பெரியபுராணம் விளக்கும்.

" சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்"

என்பது மேற்கூறிய கருத்தமைந்த இனிய திருப்பாட்டு.

குருஞானசம்பந்தர் :

திருஞானசம்பந்தர் வருகைக்குப்பின் தமிழ் மக்கள் தம் குழந்தைகள் நன்ஞானம் பெற்றுச் சிறக்கவேண்டுமென்ற விருப்பில் 'ஞானசம்பந்தன்' என்ற பெயரைத்தம்குழந்தைகட்கு இட்டு மகிழ்ந்தனர். இதனை விளக்கும் கல்வெட்டுக்கள் பல சோழர் காலத்தில் உள்ளன. இவ்வாறான 'ஞானசம்பந்தன்' என்ற இளமைத் திருநாமத்தைப் பெற்று, கல்வி, அறிவு, ஒழுக் கங்களால் சிறந்து 'குருஞானசம்பந்தர்' என்று போற்றப் பெற்ற பேரருளாளரால் தோற்றுவிக்கப் பெற்ற பெருமை மிக்கது திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம். கி. பி. 16 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தென்பாண்டிநாட்டு ஸ்ரீ வில்லி புத்தூரில் கார்காத்த சைவ வேளாளர்குடியில் அவதரித்து, இளமையிலேயே ஞானம் முதிர்ந்து, மதுரைச் செந்தமிழ்ச் சொக்கனைப் பூஜாமூர்த்தியாகக் கைவரப்பெற்று, கமலை ஞானப் பிரகாசதேசிக மூர்த்திகளை இறையருளால் குருவாகப் பெற்று, சிவஞானம்எய்தி, மாயூரத்தின் கீழ்பால் காவிரியின் தென்கரை யில் 'தருமையாதீனத்'தைத் தோற்றுவித்து, எண்ணற்ற பக்குவி

களுக்குச் சிவஞானோபதேசம் செய்து 'ஜீவசமாதி' கொண்டிலங்கும் **ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்** குருபூஜைப் பெருவிழா எதிர்வரும் **12—6—82 சனிக்கிழமை** அன்று தருமையாதீனத் திருமடத்தில் சீரும் சிறப்புமாக நடைபெற விருப்பதை வாசகர்களுக்கு மகிழ்வுடன் அறிவிக்கின்றோம்.

செய்ந்நன்றிப் பெருவிழா :

குருபூஜை என்பது குருவருள்பெற்ற அடியார்களும் பெற வேண்டும் என்ற ஆர்வம் உள்ளவர்களும் குருமூர்த்திகளைப் பூசித்துப் போற்றும் விழாவாகும். இது செய்ந்நன்றியறிதலைப் புலப்படுத்துப் பெருவிழா. 'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு' என்றார் திருவள்ளுவர். தன்னை அறிவித்துத்தான்தானச் செய்தானைப் பின்னை மறத்தல் 'பிழை' என்று சாத்திரம் பேசுகின்றது. ' நீயே துணையன்றி வேறில்லை...... என்றும், எந்நாட்டிலும் நான் போயே திரியினும் ஞானப்பிரகாச நின்பொன் மலர்த்தாள் பேயேன் மறப்பதுண்டோ இனிமேலும் பிறக்கினுமே ' என்றும்,

' கிடந்தாலும் ஞானப்ர காசனென் பேன்கிடந் தேஎழுந்து
படர்ந்தாலும் ஞானப்ர காசனென் பேன்பசி யோடுபிணி
அடர்ந்தாலும் ஞானப்ர காசனென் பேன்அந்த அந்தகனார்
தொடர்ந்தாலும் ஞானப்ர காசனென் பேன்பினைச் சொல்
[இல்லையே "

என்றும், ஸ்ரீ குருஞானசம்பந்தரே தம் ஞானசிரியர் ஸ்ரீ கமலை ஞானப்பிரகாச தேசிக மூர்த்திகளிடம்காட்டும் நன்றிப்பெருக்கு, ஞானகுருநாதனை நாம் நினைந்துபோற்ற நமக்கு வழிகாட்டுவன. இத்தகைய ஸ்ரீ குருஞானசம்பந்தரைக் குருபூஜை விழாவில், பூசிப்போம்; போற்றி மகிழ்வோம். அவ்வருளாளர் வழியில் வந்து நமக்கு நற்குணநலங்கள் பலவற்றை நாளும் அருளும் குருவையும் போற்றுவோம்; குணநலம் பெறுவோம்.

குருபூஜை செய்து குருவருள் பெறுவோம்.

உ

குருபாதம்.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

21—4—82 முதல் 25—4—82 முடிய

இலங்கையில் நடைபெற்ற அகில உலக இந்துமத மாநாட்டிற்கு

வழங்கியருளிய

ஆசியுரை.

இந்து மதம்

அறுவகைச் சமயத் தோர்க்கும் அவ்வவர் பொருளாய், வேறுங்
குறியது உடைத்தாய், வேதாகமங்களின் குறியிறங்தங்(கு)
அறிவினில் அருளால் மன்னி அம்மையோ டப்ப ஞகிச்
செறிவொழி யாது நின்ற சிவனடி சென்னி வைப்பாம்.

மத விளக்கம் :

'மதம்' – என்பது 'கொள்கை' எனப் பொருள்தரும். எனினும், இஃது ஆன்மீகத் துறை பற்றிய கொள்கைக்கே சிறப்பாக உரியபெயராயிற்று.

கொள்கையை, 'இலட்சியம்' – என்றும் கூறலாம். ஆன்ம லாபமாகிய இலட்சியத்தை அடைவதற்குச் சில வழிமுறைகளைப் பெரியோர்கள் வகுத்தமைத்தார்கள். அந்த அமைப்பே 'சமயம்' எனப்படுவது எனினும், 'மதம், சமயம்' என்பவற்றை ஒரு பொருட் சொற்களாக வழங்குதல் வழக்கமாயிற்று.

இந்தியாவில் பல மதங்கள் :

'உலக நாடுகளில் இந்தியா ஆன்மீகத் துறையில் சிறப்புற்ற நாடு' என்பது உலகு உடன்பட்ட கொள்கையாக உள்ளது. இவ்விந்தியா மிகப் பழங்காலந் தொட்டே பண்பாடுற்று

விளங்குவது. அதனால் இங்குப் பலவகை மதங்கள் காணப்படுகின்றன. அவை அனைத்தும், ' இந்துமதம், பிறமதம் ' – என்னும் இரு பிரிவுகளில் அடங்குவனவாய் உள்ளன. ' இந்து மதம் ' என்பது குறிப்பிட்ட ஒரு மதத்தைமட்டுமே குறிப்பதன்று: ஏறக்குறைய ஒத்த கொள்கையையுடைய பல மதங்களைக் குறிக்கும் பெயரே இந்துமதம் என்பது.

வைதிக அவைதிக மதங்கள் :

இந்து மதங்கள் அனைத்திற்கும் ஒரு பொதுவான அடிப்படைக் கொள்கை உண்டு. அது, ' வேதம் தலையாய பிரமாண நூல் ' – என்பதேயாகும். எனவே, ' இந்து மதம் ' – என்பதற்குக் கருத்து ' வேதவழிப்பட்ட மதம் ' – என்பதேயாகும். ' வேதம் சிறந்த பிரமாண நூல் ' – என்னும் அடிப்படைக் கொள்கையைச் சிறிதும் உடன்படாமல், ' வேதம் உயர்ந்தோரால் கொள்ளத் தக்க ஒருநூல் அன்று ' எனமறுத்து. அதற்கு நேர்மாறாய் உள்ள மதங்களும இந்தியாவில் உள்ளன. அவை சமணமும் பௌத்தமும் ஆகும். அதனால் அவை, ' புறச்சமயங்கள் ' எனப்படுகின்றன. வேதவழிப்பட்ட மதங்கள், ' வைதிக மதம் ' என்றும் ஏனையவை ' அவைதிக மதம் ' என்றும் சொல்லப்படும். ஆகவே, சமணமும், பௌத்தமும் அவைதிக மதங்கட்கே பெயராயிருப்பினும் ஆங்கிலேயர் இந்தியாவை ஆண்டகாலத்தில் இந்நாட்டுக்குரிய சட்டங்களை அமைத்தபொழுது ஜைன மதத்தை இந்து மதத்தோடு ஒன்றுபடுத்தியே இச்சட்டத்தை அமைத்தார்கள். என்றாலும் கொள்கைகளிலும், நடைமுறைப் பழக்க வழக்கங்களிலும் ஜைனமதம் முற்றிலும் வேறுபட்டுப் புறமதமாகவே உள்ளது. பிற்காலத்தில் வெளிநாட்டினின்றும் இந்தியநாட்டிற் புகுந்த மதங்கள் ' இசுலாமியம், கிறித்தவம் ' என்பனவாகும். இவற்றை நவீன மதங்கள் என்பர். இவையும் அவைதிக மதங்களே என்பதைச் சொல்லத் தேவையில்லை.

வேதமதமே இந்துமதம் :

இந்திய நாட்டில் நில அமைப்பில் சிந்து நதியைச் சார்ந்த சமவெளி நிலம் பலவகையில் மக்கள் வாழ்க்கைக்குச் சிறந்த இடமாக உள்ளது. இந்திய நாட்டில் மக்கட்பெருக்கம் அங்கே தான் மிகுந்திருந்தது என ஆராய்ச்சியாளர் கூறுவர். பாரசீகம், கிரீஸ் – என்னும நாட்டிலிருந்து இந்திய நாட்டை முதற்கண் வந்துபார்த்த மக்கள் சிந்துவெளி மக்களை முதலில் 'சிந்துக்கள்' எனக் கூறியவர்கள், பின் ஹிந்துக்கள் – ஹிந்திஸ் என வழங்கினர். அவ்வாறு அவர்களால் குறிக்கப்பட்ட மக்களில்

பெரும்பாலோர் வேத மதத்தினராய் இருந்தமையால், 'ஹிந்துக்கள்' என்பதற்கு 'வேதமதத்தினர்' என்பதே பொருளாயிற்று. அதன்பின் அண்மைக் காலத்தில் இந்தியாவிற்கு வந்து இதனைக் கைப்பற்றி ஆளத்தொடங்கிய ஆங்கிலேயர் இந்நாட்டு மக்களை 'இந்துக்கள்' என்றும் 'இசுலாமியர் என்றும் இரண்டே வகையினராகப் பிரித்து, அவரவர்கட்கும் அவர்கள் கொள்கைப் படி வேறுவேறான சட்டங்களை வகுத்தார்கள். அவ்வமைப்பில் அவர்கள் ஜைனர்களையும், இந்துக்களாக வகைப்படுத்திச் சட்டம் செய்தார்கள். ஆயினும், உண்மையில் ஜைன மதம் இந்து மதத்திற்கு வேறானதாகவே உள்ளது.

வேதகாலம் :

இந்திய நாட்டு வரலாற்றை ஆராய்கின்றவர்கள் அதற்குரிய நூல்களை மட்டுமன்றி, அகழ்வாரய்ச்சியையும் அதற்குச் சிறந்த சான்றுகளாகக் கொள்கின்றனர். இந்து மதத்தின் – அல்லது வைதிக மதத்தின் – கொள்கைப்படி வேதம் காலம்கடந்தது – உலகம் தோன்றிய காலத்தே தோன்றியது எனக் கூறப் பட்டாலும், வரலாற்றாசிரியர்கள் வேதத்தின் காலத்தை வரை யறுக்கின்றனர். அவர்களுக்குள்ளே சில கருத்து வேறுபாடுகள் இருப்பினும் யாவர்க்கும் பொதுவான வகையில், வேதத்தின் தொடக்ககாலம் இற்றைக்குச் சற்று ஏறக்குறைய ஐயாயிரம் ஆண்டுக்கு முற்பட்டது–அஃதாவது, கி. மு. 3–ஆம் நூற்றாண்டு எனக்கொள்கின்றனர்.

அகழ்வு ஆய்வின் முடிவு :

அகழ்வாராய்ச்சியில் சிந்துசமவெளியில் அகழ்ந்து கண்ட முடிவில், 'அங்குப் புதையுண்டு போன நகரங்களில் வேத காலத்திற்கு முன்பே நாகரிகம் மிக்க மக்கள் வாழ்ந்திருந்தமை அறியப்படுகின்றது எனக் கூறுகின்றனர். 'வேதம் ஆரியமொழி யாய் இருத்தலால், அதனைச்சார்ந்து விளங்கிய நாகரிகமும் ஆரிய நாகரிகமே' என்றும், 'சிந்து நதிப்பாங்கரில் வாழ்ந்த மக்கள் ஆரியர் இந்நாட்டிற் புகுதற்கு முன்பே வாழ்ந்தவராத லாலும், பிறவற்றாலும் அங்கு அன்று விளங்கிய நாகரிகம் திராவிட நாகரிகமே என்றும் கூறுகின்றனர்.

சிந்துவெளி மதம் சைவமே :

இனி அவ்வாராய்ச்சியாளர்கள் கூறுகின்ற மற்றொன்றையும் இங்கு நாம் கவனித்தல் வேண்டும். அது, சிந்துவெளி மக்களது

சமயம் இன்று 'சைவம்' எனப்பெயர்பெற்று விளங்கும் சமயமே என்பது சிவலிங்கங்கள் அங்குக் காணப்படுவதனாலும், பிற வாற்றாலும் தெளிவாய்த் தெரிகின்றது என்பதேயாகும். இதனால், சைவசமயம் – அல்லது. சிவநெறி வேத காலத்துக்கு முற்பட்டது என்பதை ஆராய்ச்சியாளர் அனைவரும் ஒருமுகமாக ஒப்புக் கொள்கின்றனர்.

திராவிட ஆரியக் கலப்பின் விளைவு :

வேத காலத்திற்கு முன்பே இந்திய நாட்டில் மக்கள் நல் வாழ்வு வாழ்ந்தனர் என்றால், ஆரியர் இந்நாட்டிற்கு வந்து வேதங்கள் தோன்றி, அது சிறப்புப் பெற்ற காலத்தில் பழமை யாகவே இந்நாட்டில் வாழ்ந்த மக்கட்கும், புதியவராய் வந்த ஆரியர்கட்கும் இடையே முதற்காலத்தில் அல்லது இடைக் காலத்தில் கருத்து வேறுபாடும், பகைமையும், பூசலும் இருந் திருத்தல் இயல்பேயாகும்.

பின்புநாளடைவில் இருதிறத்தாரும் கொண்டும் கொடுத்தும் பழகும் முறையில் ஓரளவு வேற்றுமை நீங்கி ஒற்றுமை உண்டா யிற்று. அதனால், வேதத்தில் ஆரியரது பழக்கவழக்கங்களோடு திராவிடரது கொள்கையும் கலப்புற்றுக் காணப்படுதலை அறிஞர்கள் வெளியிடுகின்றார்கள். இந்நிலையில் சைவத்தையே தங்கள் சமயமாக்கொண்டு வாழ்ந்த பண்டை மக்களில் பெரும்பாலோர் பல காரணத்தால் பகைமை நீங்கி ஆரியரோடு ஒன்றுபட்டுத் தங்களை வேதநெறி நிற்பவராகவே ஆக்கிக் கொண்டவராவர். அதனால் வைதிகமும், சைவமும் வேறாய் நில்லாது ஒன்றாகிவிட்டன. இதுவே முதலில் 'இந்துமதம்' எனக் குறிப்பிடப்பட்டது.

திராவிட ஆரிய இணைப்பே இந்துமதம் :

ஒருவகை நாகரிகம் தோன்றும்பொழுது அஃது அதற்கு முற்பட்ட நாகரிகத்தின் ஒரு பகுதியைத் தன்னகத்தேகொண்டு தோற்றம் எடுக்கும். வரலாறு என்பது என்றும் தொடர்புற்று வரும் இயக்கமாகும். இத்துடன் எல்லாம் முடிந்துவிட்டன என்றும், இனி நம்மைச்சார்வன எவையும் இல்லை என்றும், எந்த இடத்திலும், எந்தக்காலத்திலும் கூற உண்மை வரலாறு இடம்தராது. உதாரணத்திற்கு ஐரோப்பாவை எடுத்துக்கொள் வோம். உரோமப் பேரரசும், கிரீஸ்பேரரசும் இணைந்த அமைப்பே ஐரோப்பாவாகும். இந்த உண்மையை உணர்ந் தால் சிந்துவெளி நாகரிகம் என்பது அதற்கு முற்பட்ட நாகரி கத்தின் ஒரு பகுதியைத் தன்னகத்தேகொண்டு தோன்றியது என்பதை நன்கு உணரலாம். எனவே, சிந்துவெளிநாகரிகம்

என்பது மிகப் பழமைவாய்ந்த திராவிட நாகரிகத்தின் முக்கிய பண்புகளைக் கொண்டுள்ளது என்பதை அறியலாம். இன்ன பல காரணங்களால் திராவிட நாகரிகமும் ஆரிய நாகரிகமும் இணைந்த இணைப்பே இன்றைய இந்து மதம் என்று வரலாற்ருய் வாளர் கூறுகின்றனர்.

வருணுச்சிரமமும், ஜைனத்தோற்றமும் :

இவ்வொற்றுமைக்குப்பின் 'வேதநெறி' என்னும் பெயரால் பலபல சமுதாயக்கொள்கைகளை வகுக்கும் நூல்கள் வடமொழியில் தோன்றின. அவற்றுள் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கன வருணுச்சிரம தருமங்கள். இவை தொழில் பற்றியும் ஒழுக்கம் பற்றியும் அமைந்திருந்த இனப்பிரிவை பிறப்பிலே வைத்து அமைத்தன. இவைகளை அடுத்துக்குறிப்பிடத் தக்கது வேள்விகளை மிகச் சிறந்தனவாகவும், இன்றியமையாதனவாகவும் வலியுறுத்தப்பட்டதாகும். இவற்ருல் எல்லாம் மேற்குறித்த ஒற்றுமையை விரும்பாத சிலர், தனியே பிரிந்து வேறு மதத்தையும், மதநூல்களையும் உண்டாக்கி, மக்களிடையே அவற்றைப் பரப்புவாராயினர். அவர்களது மதமே ஜைனமதமாகும். ஜைனத்திற்கும், சைவத்திற்கும் சில பல ஒற்றுமைகள் காணப்படுவதற்கு மேற்கூறிய நிலைமையே காரணமாகும். மேற்கூறிய வகையில் 'இந்துமதம்' எனப்பெயர் பெற்ற மதம் இயற்கையில் பழைய மதமாக விளங்க, 'ஜைனமதம்' புதிய மதமாய்ச் சிலர் சிலரிடையே சிறப்புற்று விளங்கியது, என்ருலும், ஜைனம் உண்மையில் பழைய மதத்தின் பிரிவேயாகும். 'ஜைனம்' என்னும் பெயர் தோன்ருதிருப்பினும், அச்சமயத்தின் தோற்றமாகிய இந்நிலை, ஜைனமதத்தைத் தோற்றுவித்தவராக இன்று வரலாற்று ஆசிரியர்களால் குறிப்பிடப்படுகின்ற வர்த்தமான மகாவீரருக்கும் மிகமுற்பட்ட காலத்து நிலைமையாகும். ஜைன சமயத்தில் வர்த்தமான மகாவீரருக்கு முற்பட்டவர்களாகப் பல தீர்த்தங்கரர்கள் சொல்லப்படுவதும், 'அவர்களுள் விருஷப தீர்த்தங்கரரே முதல்வர்' என்று சொல்லப்படுவதும், இங்கு நினைக்கத் தக்கன.

புறச்சமயங்கள் :

ஜைனக் கொள்கை நாட்டில் பரவிவரும்பொழுது கௌதம புத்தர் தோன்றித் தம் தனியான ஒரு தவநிலையில் ஒரு புதிய ஞானத்தைப்பெற்று அதனைவெளியிட்டபொழுது, அதனைப்பின் பற்றியவர்கள் அதனையும் வளர்க்கத்தொடங்கினுர்கள். அதுவும் வேதத்தைப் புறக்கணிப்பதாகவே அமைந்தமையால், அந்தப் பௌத்தமும், அதற்கு முன் இருந்த ஜைனமும் ஏறக்குறைய

ஒன்றுபோல ஆகி, வைதிகர்களால், 'புறச்சமயங்கள்' என விலக்கும் விலக்கிற்கு உள்ளாயின.

வைதிக சைவப்பிரிவு :

வைதிகத்தில் சைவம் சிறப்பிடம் பெருமைபற்றி அதன் சிறப்பினை உணர்த்தல்வேண்டிச் சைவாகமங்கள் பின்பு தோன்றலாயின. அதனால், மீண்டும் வைதீகத்திற்கும், சைவத்திற்கும், இடையே சிறுவேறுபாடு நிலவலாயிற்று. இவ்வேறுபாட்டில் சைவருள்ளே சிலர் தாம் தாம் விரும்பும் கடவுளரைச் சிறப்பாக வைத்துத் தங்கட்கு விருப்பமான வகையில் வழிபடலாயினர். அதனால் ஷண்மதங்கள் தோன்றின. அவை வழிபடு கடவுள்பற்றி வேறுபட்டனவேயன்றி கொள்கை வகையில் பெரிதும் வேறுபடவில்லை. அவை சைவம், வைணவம், சாக்தம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் என்பன. 'சௌமியம்' என்றும் ஒருமதம் சொல்லப்படுகின்றது. இவை எல்லாம் சைவத்தின் பிரிவுகளேயன்றி, வேறாகாமையைக் காணலாம்.

சைவ வைணவப் பிரிவு :

வைணவம் சைவத்தினின்றும் வேறுபட்ட ஒருமதமாகியது மிகப் பிற்காலத்திலேயாகும். ஷண்மதங்கட்கும் பின்னர் மற்றும் சிலர் 'தந்திரங்கள்' எனச் சில நூல்களைப் பின்பற்றிச் சில மதங்களைக் கைக் கொண்டனர். அவை,

'பாசுபதம், மாவிரதம், காபாலிகம், வாமம், வைரவம்'

என்பன. இவைகள் 'தாந்திரிகங்கள்' என்றும், 'வாமமார்க்கங்கள்' என்றும் சொல்லப்பட்டன,

இதுவரையில் சொல்லிவந்தன யாவும் பெரும்பான்மையும் 'கிரியா மார்க்கம்' எனச் சொல்லப்படுகின்ற வழிபாட்டு முறைகள் பற்றி நேர்ந்த நிலைமைகளேயாகும்.

தத்துவ ஆய்வு :

அதன்பின் 'மெய்ப்பொருட் கொள்கை' என்னும் தத்துவ ஆராய்ச்சி மிகுதிப்பட்டது. இதற்கு வித்திட்டவை 'வேதாந்தம்' என்னும் உபநிடதப் பகுதிகளும், பௌத்த மதமும் ஆகும். பௌத்தமதம் முற்றிலும் ஆராய்ச்சியையே மேற்கொண்டது. அதனைச் சார்ந்து ஜைனமும் அந்நிலையை மேற்கொண்டது. எனினும், 'வேதப்பிரமாணம்' என்னும் நூற்பிரமாணத்தை அடிப்படையாகக் கொண்டு, 'தரிசனங்கள்' அல்லது 'சாத்திரங்கள்' என்னும் நூல்கள் தோன்றி, மெய்ப்பொருள் இயலை விளக்கின. அவை நியாயம், வைசேடிகம், பூர்வமீமாஞ்சை,

உத்தர மீமாஞ்சை, சாங்கியம், யோகம் என்பனவாகும். இவை 'ஷட்தரிசனங்கள்' எனப்படும். 'தர்சனம்' என்பதற்கு வேதத்தின் உண்மைப் பொருளைக்காட்டுவன என்பது பொருளாகும். நியாயமும், வைசேடிகமும்–தர்க்கமதங்கள். இவையும், சாங்கியமும் வேதப்பொருளைப் பொதுவாக உணர்த்துவன. வேதத்தின் கருமகாண்டத்தைச் சிறப்பாக ஆராய்ந்து விளக்கம்தருவது பூர்வமீமாம்சை. ஞானகாண்டத்தைச் சிறப்பாக ஆராய்ந்து விளக்கம்தருவது உத்தரமீமாம்சை. இதுவே, 'பிரம்ம சூத்திரம்' எனப்படுகின்றது. யோகம் யோகமுறையை விளக்குவது.

பிரம்மசூத்திரமும் பாடியமும் :

நீண்டகாலத்திற்குப்பிறகு பிரம்மசூத்திரத்திற்கு அவரவர்கள் தங்கள் கருத்துப்படி பாடியம் (பேருரை) செய்தனர். அதனால் தத்துவ சமயங்கள் பலவாயின. அவற்றுள் சங்கரர் பாடியத்தால் அத்துவித மதமும், நீலகண்டர் பாடியத்தால் சிவாத்துவித மதமும், இராமநுசர் பாடியத்தால் விசிட்டாத்துவித மதமும், மத்துவர் பாடியத்தால் துவித மதமும் தோன்றின. இவருள் இராமாநுசரே வைணவத்தைச் சைவத்திற்கு வேருகப் பெரிதும் பிரித்தும் வைத்தார். அவருடைய கொள்கைக்கு ஆதரவாக ஆழ்வார்களில் ஒருவர் இருவரது பாடல்கள் சில இருப்பினும் வைணவத்தை ஒரு தனி மதம் ஆக்கி நிலை நிறுத்தியவர் இராமாநுசரே. இந்தப் பாடியங்கள் தோன்றுதற்கு முன்பே புராணங்களும், அவற்றின் பின் இதிகாசங்களும் தோன்றின. அவை பெரும்பாலும் பக்திநூல்களாகவே ஆகிவிட்டன.

தமிழ்நாட்டின் தத்துவநிலை :

இவையெல்லாம் பெரும்பாலும் வடநாட்டு நிலைமைகளேயாக, தமிழ்நாட்டின் நிலைமை வேருகவே இருந்தது. அது பழமையாக இலக்கியங்களில் ஈடுபட்டிருந்தது. பின்பு நாயன்மார்களும், ஆழ்வார்களும் தோன்றிப் பக்திநெறியைப் பரவச் செய்தனர். பாடியங்கட்குப்பின் சைவ சந்தானசாரியர்கள் தோன்றிச் சித்தாந்த உண்மைகளையும், அவற்றிற்கு ஏற்ற ஒழுக்க நெறிகளையும் வலியுறுத்தினர். அதனுல், பக்தி நெறியே தமிழ்நாட்டில் நிலைபெற்றது. அதனுல்,

"சைவ சமயமே சமயம்"

"சைவத்தின்மேல் சமயம்வேறிலை"

என்னும் நிலை தமிழ்நாட்டில் உளதாயிற்று.

தமிழில் பக்திக் கருவூலமாகப் பெரியபுராணமும், தத்துவக் கருவூலங்களாகச் சித்தாந்த சாத்திரங்களும் இருத்தலை யாவரும்

அறிந்து மகிழ்ந்து போற்றுகின்றனர். குறிப்பாகப் பெரிய புராணம் முழுக்க முழுக்கத் தமிழக அருளாளர்களின் அருள் வரலாருகவும், சித்தாந்த சாத்திரங்கள் முழுக்க முழுக்கத் தமிழரின் தத்துவ விளக்கங்களாகவும் இருத்தல் அவர்களால் அறிந்து போற்றப்படுகின்றன. இந்நிலை இன்னும் நன்கு செழித்தோங்குவதற்கு ஆவன செய்தல் தமிழ் மக்கள் அனைவர்க்கும் தலையாய கடனாகும்.

சைவத்தின் சிறப்பு :

'சைவ சமயமே சமயம்' - எனக் கூறிய தாயுமான அடிகள் மற்ருேர் இடத்தில் ஓர் அரிய கருத்தை வெளியிடுகின்ருர். அது,

" சன்மார்க்க நெறியதனின் பொருளும் வேறு
சமயசங்கே தப்பொருளும் தான்ஒன்ருகப்
பன்மார்க்க நெறியினிலும் கண்டதில்லை"

என்பது.

"சன்மார்க்க நெறியதனின் பொருள்" என்றது தத்துவக் கொள்கையை. "சமய சங்கேதப்பொருள்" என்றது மரபு வழியான கிரியைகளை. 'இந்தஇரண்டும் ஒன்ருகச் சைவ சமயத்தில் காணப்படுவதுபோல, வேறு எந்தச் சமயத்திலும் காணப்படவில்லை' என்பது இதன் பொருள். சைவத்தில் சமய தீக்கை பெற்று அநுட்டானம் செய்யும்பொழுது முதலில் ஆசமன மந்திரமே ஆன்ம தத்துவம், வித்தியா தத்துவம்; சிவதத்துவம் என்பவற்றைச் சுத்தி செய்வதாகச் சொல்லப் படுகின்றது.

பஞ்சப் பிரமம், சடங்கம்-என்னும் மந்திரங்கள் சிவபிரானது பஞ்சசக்திகள் அவனுக்குச் சிரசு முதலிய அங்கங்களாகவும், இருதயம் முதலியனவாகவும் அமைதலை நினைவூட்டுகின்றன.

சிவபூசையில் ஆசனம் - மூர்த்தி - மூலங்கள் தத்துவங்களையும், அவற்றிற்கு அப்பாற்பட்டு நிற்கும் சத்தியையும் அச் சத்தியைத் தனக்குக் குணமாக உடைய சிவத்தையும் விளக்கி நிற்கின்றன. இன்ன பலவும் இத்தகையனவே. இனி சைவ சித்தாந்தத் தத்துவங்கள் இன்றைய அறிவியலோடு ஒத்து நிற்றலை அறிவியலார் கண்டு வியக்கின்றனர்.

மாநாடு சிறக்க வாழ்த்து :

இத்தகைய அரும்பெரும் சமயத்தை மக்களிடையே பரப்பி, என்றும் நின்று நிலவச்செய்வது இந்துமதத்தில் பற்றுடைய யாவர்க்கும் இன்றியமையாக் கடனாகும். அக்கடமையை

அவர்கள் செவ்வனே ஆற்றி வெற்றிபெறக் குருவருளும் திருவருளும் பெரிதும் துணைசெய்வனவாக. இந்தியாவில் தோன்றி இலங்கையில் நிலைபெற்று விளங்கும் பௌத்தசமயத்தை அரசாங்கச் சமயமாகக் கொண்டுள்ள இலங்கை அரசு அகில உலக இந்து சமய மாநாட்டை இலங்கையில் மிகச் சிறந்த முறையில் நடத்துவது, பொதுவாக அனைத்துச் சமயத்தினராலும் சிறப்பாக இந்துசமய மக்களாலும் பாராட்டத்தக்க செயலாகும்.

மாநாடு சிறப்புற்றுத் திகழவும், அதில் பங்கு கொள்ளும் அனைவரும் எல்லா நலங்களும் பெற்று இனிது வாழவும் நமது ஆன்மார்த்தமூர்த்தியாகிய ஸ்ரீசெந்தமிழ்ச்சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயது எல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.

— ஞானசம்பந்தர்.

கடிதம்:

மாதந்தோறும் வெளிவரும் "ஞானசம்பந்தம்" கற்போர் மனதைக் கவரும் சிறந்த திங்களிதழாகும். மக்கள் வாழ்வில் கடைப்பிடிக்கவேண்டிய ஒழுக்கங்கள் எதிர்காலம் முதலியவற்றுடன் வெளிவருவது, இந்த தெய்விகப் பணிக்காகத்தங்கள் இதழுக்கு ஆயுள் சந்தாதாரராகச் சேர்வது மனதுக்கு மிகவும் மகிழ்ச்சியையும் அமைதியையும் ஏற்படுத்துகின்றது.

R. கிருஷ்ணமூர்த்தி,
ரெயில்வே கண்டிராக்டர்.
குண்டக்கல்லூர்.
உடையாப்பட்டி—சேலம் 14

8—5—82

தித்திக்கும் அருள் சுரக்கும் முத்தையா!

திரு, பொன். பாஸ்கரமார்த்தாண்டன்

உங்களுக்கு அந்தச் சந்தேகம் உண்டோ......

அதுதான்; 'கைலாசம் இமயமலையில்தான் இருக்கிறதா? அல்லது வேறு எங்கும் இருக்கிறதா?' என்ற சந்தேகம்...

அப்படியொரு சந்தேகம் உங்களுக்கு ஏற்பட்டிருக்கிறதோ இல்லையோ, எனக்கு ஏற்பட்டு விட்டது...

அந்தச் சந்தேகத்துக்குக் காரணம், இன்னொரு தெய்விகச் சந்தேகம்.

ஆம்; மகாவிஷ்ணு ஒரு ராமாவதாரம் எடுத்து மாந்தர்களுக்குள் ஒருவராய் வாழ்ந்து, அந்த மனிதர்களின் வேதனைகளையெல்லாம் அறிந்துகொண்டு-அனுபவித்துச் சென்றாரல்லவா...?

அதேபோல் மகாதேவனான ஈசனுக்கும், மனிதர்கள் மத்தியில் போய் வாழவேண்டும் என்று திடீரென்றுஎண்ணம் ஏற்பட்டிருக்க வேண்டும். அதுவிஷயமாக அம்பாளிடம் கலந்தாலோசித்திருப்பார்... அப்போது அம்பாள், "நாம் போகிறதுதான் போகிறோம்...என் பிள்ளைகளானமாந்தருக்கு பிறவியின் பயனை மாத்திரமல்லாது, உலகில் வாழும்போது அவர்களுக்கு ஏற்படுகின்ற எத்தனையோ உலகியல் பிணிகளையும் தீர்த்து அருளுகிற ஓர் அவதாரம் எடுத்துச் செல்லுவோம். அன்னையான எனக்குத் தான் பிள்ளைகள்துயர் தெரியும். அவர்களுக்குக் கொடிய உடல் நோய்கள் உண்டு. பிள்ளையில்லாக் குறை உண்டு. திருமணக் குறையுண்டு... எல்லாவற்றையும் அவர்களோடுஇருந்து தீர்த்து வைத்துவிட்டு வருவோம்" என்று கூறியிருப்பார்.

உடனே மருந்தும் தைலமும் எடுத்துக்கொண்டு-மாந்தரின் ஆன்மப் பிணி மட்டுமல்லாது உடல்பிணியையும் தீர்ப்பதற்கு வைத்தியர்களுக்கெல்லாம் பெரிய வைத்தியரான பவரோக வைத்தியநாதராய் பூமிக்குப் புறப்பட்டு வந்துவிட்டார்கள் சுவாமியும்- அம்பாளும்.

கிருத யுகத்தில் அப்படி வந்தவர்கள் கலியும் ஆகியும் தம் இமய கைலாயத்துக்குத் திரும்ப முடியவில்லை. காரணம், மக்க ளாகிய நம்மிடமிருக்கும் பிணி அப்படி... அது தீர்ந்தால் அல்லவோ, 'வந்த வேலை முடிந்தாயிற்று' என்று ஈசனும்ஈசுவரி யும் செல்ல முடியும்... நம் வியாதிகளும் குறைகளும் தீர்க்கத் தீர்க்க குறையக் காணோம்... இறைவனும் இறைவியும் தீர்த்துக் கொண்டே இருக்கிறார்கள்... இதில் யுகங்கள் போனதே தெரிய வில்லை. கிருத யுகம் ஆயிற்று. திரேதயுகம் ஆயிற்று ; துவாரயுக மாயிற்று. கலியுகம் ஆயிற்று... ஊஹூம். அவர்களுக்கு வேலை தீர்ந்த மாதிரி இல்லை... கடைசியில் இங்கேயே நிரந்தரமாகத் தங்கி விட்டார்கள்.

அபப்படி இறைவனும் இறைவியும் இப்புவியில் மக்களுக்கு அருள் வழங்கி – மறுமையில் மட்டுமல்லாது இம்மையிலும் அவர்கள் பிணியகற்ற வந்தமர்ந்த திருத்தலம் தான் வைத்தீஸ் வரன் கோவில்!

அதனால் தான் முருகப்பெருமான் சூரனை வெல்வதற்கு சக்தியிடம் வேல்வாங்க இத்தலத்துக்கு அவர்களுக்கு அவர் களைத்தேடிவந்தார்... இங்கேவந்தவரையும் கூடவே இங்கேயே உட்காரச்செல்லி தம்மோடு வைத்துக்கொண்டார்கள் அம்மை யும் அப்பரும்... அந்த அழகுக் குழந்தையான முருகக் குழந்தை குத் தான்தமிழ், தமிழ்நாடு என்றால் ரொம்ப ஆசையாயிற்றே... ஈசனுக்கும் ஈசுவரிக்கும் செல்லமான அந்தக் குழந்தை செல்வ முத்துக்குமார சுவாமியாக இங்கேயே எழுந்தருளிவிட்டது...

–இப்படியல்லாம் நடந்திருக்காதுஎன்று நினைக்கிறீர்களா...?

இந்தத் தலத்துக்கு அருகே இருக்கும் சீர்காழியைப் பாருங் கள். உங்களுக்குப் புரியும். சீர்காழி என்றதும் ஞானசம்பந்தப் பெருமான் பாலுக்காக அழுததும் – அம்பாளே அமுதூட்டிய சம்பவமும்தானே நினைவுக்கு வரும்... கூப்பிடு தூரத்தில் இருந்த தால்தான், ஞானசம்பந்தரின் பசி தீர்க்க அத்தனை விரைவாக ஓடி வந்திருக்கின்றாள் அம்பாள்!

(தமிழகத்தில் தஞ்சை மாவட்டத்தில் சீர்காழிக்கு அருகே காவிரிக்கு வடபால் உள்ள இத்தலத்திற்குச் செல்ல ரயில் வசதியும் உண்டு. வைத்தீஸ்வரன் கோவில் உள்ள ஊரிலேயே ரயில்நிலையம் இருக்கின்றது... தஞ்சைமாவட்டம் மட்டுமல்லாது தமிழகத்திலுள்ள பொருவாரியான மக்களுக்கு பிரார்த்தனைத் தலமான (பிறந்தகுழந்தைக்கு முதல் முடிஇறக்கும் பிரார்த்தனை) வைத்தீஸ்வரன் கோவிலில் யாத்திரீகர்கள் வசதிக்குச் சத்திரங் கள், மடங்கள் உண்டு. இந்த ஆலயம் தருமரம் ஆதீனத்துக்குச்

சொந்தமாக இருந்த. அவர்களால் நிர்வகிக்கப்படுவதால், அதன் சுத்ததுக்கு சொல்லவே வேண்டாம்!)

ஃ ஃ ஃ ஃ

மந்திரமும் தந்திரமும் மருந்துமாக நின்ற அந்த பவரோக வைத்தியநாதன் திருத்தலத்தில் போய் நிற்கிறோம்...

மந்திரமும் தந்திரமும் மருந்துமான மகேசன்!

ஆம்; அந்தப் பூமியில் நிற்கும் அளவு நமக்கு யோக்கியதை வந்து விட்டதா, என்ன?

எத்தனை எத்தனை புண்ணிய பாதங்கள் பட்டதலம் அது!

புள் – எனும் வாய்மை மிகு ஜடாயு; 'ருக்கு'வாகிய வேதம் வேதம்; 'வேள்' ஆகிய முருகக்கடவுள்; ஊர் (ஊர்ந்து செல்வது போல் தோன்றுவதால், 'ஊர்' என்னும் பெயர் பெற்ற சூரியன்)– இவர்கள் தவம் செய்து இத்தலத்துக்கு 'புள்ளிருக்கு வேளூர், என்று ஒரு பெயரையே நிறுவியிருக்கிறார்கள். இவர்கள் மூச்சுப் பட்ட காற்றையா நாம் சுவாசித்துக் கொண்டிருக்கிறோம்? இவர்களுடைய பாதங்கள் பட்ட பூமியையா நாம் மிதித்துக் கொண்டு நிற்கிறோம்... நமக்கு அங்கு நிற்க என்ன அருகதை உண்டு...

ஆனால் ஞானசம்பந்தப் பெருமானும் அப்பர் பெருமானும் நமக்குத் தைரியம் சொல்கிறார்கள்...

'பேராயிரம் பரவி வானோர் ஏத்தும் பெம்மான்; பிரிவிலா அடியார்க்கு என்றும் வாராத செல்வம் வருவிப்பவன்; மந்திர மும் தந்திரமும் மருந்துமாகித்; தீராத நோய்த் தீர்த்தருள வல்லவன்; இந்தப்புள்ளிருக்கு வேளூரான்', என்று இந்த வைத்தீ சுவரப் பெருமானை நமக்கு அறிமுகப் படுத்துகிறார் அப்பர் பெருமான், தன் திருத்தாண்டகத்தில்.

ஞானசம்பந்தப் பெருமானோ 'தீவினைக்கோர் மருந்தாவான்' என்று நமக்கு நினைவூட்டுகிறார் தன் தேவாரத்தில்.

நமக்குத் தெம்பு வருகிறது; நம்பிக்கை வருகிறது...

ஆமாம், தீராத நோய் தீர்த்தருளவல்லவன் – தீவினைக்கோர் மருந்தானவன் இங்கிருக்க நாம் வேறு எங்கு செல்வது?

நம்மிடம் இல்லாத தீவினையா? நம்மைச் சூழ்ந்திராத பிணியா.........? எல்லாவற்றிருக்கும் மருந்தாகி நிற்கின்றானே, வைத்தியநாதன்...அவனைத்தேடித்தானே நாம் ஓடவேண்டும்... அந்தப் பெருமானும் நம்மைத் தேடியே - நமக்காகவே காத்துக் கொண்டிருக்கிறாரே...!

இதோ, அவனைத் தேடி ஓடுகிறோம்...

ஆலயத்திற்கு மேற்குப் புறமும் கீழ்ப்புறமும் கோபுர வாசல்கள் இருக்கின்றன. இரு புறமாகவும் தரிசனத்துக்குப் பிரவேசிக்கலாம்.

ஆனால் நாம் கீழ்ப்பக்கமாகவே செல்லலாம். அங்கே தான், கிருத யுகத்தில் ஈசனும் அம்பாளும் முதன் முதலாக எழுந்தருளிய ஆதிவைத்தியநாதர் சந்நிதி இருக்கிறது...

நுழைந்ததும் நம் தரிசனத்துக்குள்ளாவது 'வேம்படிமால்' என்ற தலவிருட்சம். இந்த மரத்திற்கு என்ன வயசு தெரியுமா? கிருத யுகத்தில் ஈசனும் ஈசுவரியும் எழுந்தருளியதிலிருந்து தொடங்கிய ஆண்டுகள்தான் அதன் வயது!

ஒவ்வொரு யுகத்திற்கும் ஒரு பெயர் கொண்டிருக்கிறது அது; கிருத யுகத்தில் அது கதம்பவனம். திரேதயுகத்தில் அது வில்வவனம், துவாபர யுகத்தில் அது வகுளவனம், (மகிழம்பூ) கலியுகத்தில் நம் கண் பார்வையில் வேம்பு...

இது கலியுகவாசிகளான நம் யோக்கியதை... மகிழமரமே நம் பார்வை பட்டதால் வேம்பாகி விட்டதே... நாம் அதை வேம்பாக்கி கசக்கச் செய்துவிட்டாலும், அது நம்பிணி தீர்க்கும் மருந்தாகி விடுகிறது. இந்த வேம்புவையும் விபூதி பிரசாதம் ஆகியவற்றையும் அரைத்துத்தான் 'திருச்சாந்துருண்டை' எனும் இத்தலத்துக்கே விசேடமான மருந்து தயாரிக்கப்படுகிறது. பிணி தீர்க்கும் மருந்தாக மக்கள் போற்றுவது இது. ஆலயத்தில் இலவசமாக தருகிறார்கள்.

ஆலயத்து ஆகம பட்டர் திரு. சுப்பிரமணிய சாஸ்திரிகள் ஒரு புதிய செய்தியையும் கூறுகிறார்...

"இறைவன் அருளால் மட்டுமல்லாது. சில சித்தர்கள் அடங்கியிருப்பதாலும் சில தலங்கள் மகிமைபெறும்... ஏனென்றால் சித்தர்கள் சமாதியில் அடங்கினாலும் அவர்கள் அடங்கிய இடத்தில் காலங் காலமாக மகிமைகள் நடக்கும். தில்லையில் திருமூலர் அடங்கினார். பழனியில் போகநாதர் அடங்கினார்... அதுபோல் இத்தலத்தில் அடங்கிய சித்தர் வைத்திய சாஸ்திரத் துக்கே நாயகரான தன்வந்திரி... அப்படியிருக்க எந்தப் பிணியும் இத்தலத்துக்கு வந்தால் நீங்கிவிடுமே!" என்கிறார்.

நம் பிணி நீக்க தன்வந்திரி இருக்கிறார் என்றால், நமக்குப் பிணியே வராதிருக்க ஒரு திருவிளையாடலையும் நடத்தியிருக் கிறார், இறைவன்.

அது கோபுரத்தைக் கடந்து பிரதட்சணமாகச் செல்லும் போது நமக்குத் தெரிகிறது. வெளிப் பிராகாரத்தில் தென் மேற்குப் பகுதியில் சந்நிதி கொண்டிருக்கிறுர் செவ்வாய். அவர் அங்கு எழுந்தருளியதே, மக்களுக்காக இறைவன் நடத்திய விளையாட்டு !

கைலாசம் இருப்பது இமயத்திலா, தமிழகத்திலா?

பொதுவாக நமக்குப் பிணி அளிக்கும் ரோககாரகன் செவ்வாய் (அங்காரகன்) என்பார்கள். நம் மேனியில் வெப் பத்தை உண்டாக்கிப் பிணியை உண்டாக்குவானும் அவன். அதோடு அவன் (செவ்வாய்) தோஷத்தால் பல கன்னியர் திருமணத் தடை ஏற்பட்டும் சிரமப்படுகிறுர்கள். இந்த ரோக காரகனை – தோஷவாதியைபெருமான் அடக்கிக் கட்டுப்படுத்தி விட்டார்.

ஆம்; அந்த வியாதிகாரனுக்கே, செங்குட்ட வியாதி வந்து அது தீர, இங்கு வந்துதான் வழிபட்டு பிணி நீங்கப் பெற்றுன்.

இப்படி அவனுடைய விஷகுணத்தைமடக்கவே இறைவன் அவனுக்கு குட்டநோயை அளித்தாரோ... ?

அதனுல் செவ்வாய் உபாதை உள்ளவர்கள், தோஷ நிவர்த்தி பெறுகிற இடம் வைத்தீஸ்வரன் கோயில். இந்த அங்காரக க்ஷேத்திரத்தில் செவ்வாய்க்கிழமைதான் விசேஷம். அதிலும் தைச் செவ்வாய்க்கிழமைகள் மிகவிசேடமாம். அங்கா ரகனுன செவ்வாய் இங்கு நன்மையே செய்வான் என்பதற்கு இன்னெரு உத்திரவாதமும் அங்கிருக்கிறது. அதாவது; செவ்வா யின் அதி தேவதையான முருகப்பெருமான் – செல்வமுத்துக் குமாரசாமியாக ஏகச் செல்வாக்குடன் அத்தலத்தை ஆள்கிறு ரே...! அவர் பார்வையில் இருக்கும்போது செவ்வாய் நன்மை களைப் பொன்னுகச் சொரிந்துதானே ஆகவேண்டும் !

போதும் போதாததற்கு செவ்வாய் சந்நிதி அருகே சுரஹ ரேஸ்வரர் இருக்கிறுர். தொடர்ந்து ஜுரம் வந்தால் அவருக்கு 108 குடம் தண்ணீர் விட்டு அபிஷேகம் செய்தால் ஜுரம் நிவாரணமாகி விடுமாம்... அவர் சந்நிதியில் நவக்கிரகச் சக்கரம் இருக்கிறது...

ஆனுல் நவக்கிரகங்கள் எங்கே?

அது ஒரு சுவையான செய்தி...

இந்தத் தலத்தில் வியாதிதரும் செவ்வாய்க்கே வியாதியைத் தந்து அடக்கியதுபோல், நம் வாழ்வில் பல வக்கிரங்களை உருவாக்கும் நவக்கிரகங்களின் வக்கிர அமைப்பையே மாற்றி

அவர்கள் அனைவரையும் ஒரே நேர்க்கோட்டில் வைத்து விட்டார், வைத்தியநாதர். அதுவும் எங்கே...? மற்ற தலங்களில் எல்லாம் சுவாமிக்கு எதிரே இந்த நவக்கிரகங்கள் இருக்கும், இந்தத் தலத்திலோ எல்லாரையும் தன் சந்நிதிக்குப் பின்னால் கைதொழுது நிற்க வைத்துவிட்டார் ஈசன்... ஆக. வைத்தியநாதப்பெருமானின் அருளைப்பெற்றுவிட்டவர்களுக்கு நவக்கிரகங்கள் எந்தத் தொல்லையும் தரமுடியாது. அதனாலேயே இத்தலத்துக்கு கோளிலித் தலம் என்று பெயர். அதாவது கோள்கள் (நவக்கிரகங்கள்) செயலற்றுப்போன தலம்.

இந்த மகிமையால்தான் ஞானசம்பந்தப்பெருமான், 'வேயுறு தோளிபங்கள் விடமுண்ட கண்டனுகிய, ஈசன் துணையிருக்கும் போது, 'நாளென்ன செய்யும், கோளென்ன செய்யும்!' என்று கேட்டாரோ?

பிரதட்சணமாகச் சென்று – ஆலயத்தின் தென்பகுதியிலிருக்கும் சித்தாமிர்த தீர்த்தத்தை அடைகிறோம்...

தல விருட்சத்தைப்போல் இதுவும் யுகத்துக்குயுகம் சில மகிமைகளையும்–கூடவே பெயர்மாற்றத்தையும்பெற்றிருக்கிறது.

கலியுகத்தில், சித்தாமிர்த தீர்த்தம்.

இந்த யுகத்தில் இதன் மகத்துவம் என்ன?

"இதில் மருத்துவச் சத்து நிறைந்திருக்கிறது. இந்த நீரில் இப்போதும் பாம்பும் தவளையும் ஜீவிக்காது. அவற்றை விட்டால் உடனே வெளியேறிவிடும்!" என்கிறார்கள்.

அந்தத் தீர்த்தத்தை அடுத்து தட்டிச் சுற்றி மண்டபம் இருக்கிறது. அது அம்பாள் சந்நிதிக்கு நேர் எதிரேயிருப்பது. அங்கே வைத்துதான் தினந்தோறும் திருப்பள்ளி எழுச்சியின் போது கோபூஜை நடக்கும்.

நாம் இந்தத் தலத்துக்குள் நுழைந்ததுமே நமக்கு ஒரு குழப்பம் வருவது இயற்கை. 'இந்தத் தலத்தில் எந்த மூர்த்தி பிரதானமானது?' என்ற குழப்பம்தான். திருச்செந்தூர் போனால் சுப்பிரமணியன், மதுரைக்குச் சென்றால் மீனாட்சி, மலைக்கோட்டைக்குப் போனால் தாயுமானவர்... இப்படி ஒவ்வொரு மூர்த்தி பிரதானமாக இருப்பதைப் போல், இந்தத் தலத்தில் எந்த மூர்த்தி பெரியவர்...?

எல்லா மூர்த்திகளும் பெரியவர்கள்தாம்... எல்லாரும் மகத்தான மகிமை பெற்றவர்கள்தாம்.

கற்பகவிநாயகர் – முழுமுதற்கடவுள். அவர் எந்தத்தலத்திலும் முதல் மரியாதைக்காரர். இந்தத்தலத்திலும் அப்படியே!

மற்றவர்கள்—வைத்தியநாதசுவாமி— அம்பாளான தையல் நாயகி — இவர்களுடைய செல்லப்பிள்ளையான முத்துக்குமார சுவாமி. நம் முருகவேள் மூன்றுமூர்த்திகளும் ஒருசேர உச்சிதச் சிறப்போடு இருக்கிறார்கள்.

இங்கு சென்றதும் யாரை முதலில் வணங்குவது என்று நமக்குக் குழப்பம் ஏற்படும். இந்தக் குழப்பம் நம் உடன் பிறந்தது. நாலு அரசாங்க அதிகாரிகள் ஒருசேர நின்றாலே, யாரை முதலில் வணங்குவது என்று தெரியாமல் கையைப் பிசைந்து நிற்போம்! மனித அதிகாரிகள், 'யாரைத்தான் வணங்குகிறான் பார்க்கலாமே' என்று நம்மைச்சோதிப்பார்கள்.

ஆனால் இந்தத் தலத்திலுள்ள மூர்த்திகளோ நம்மைத் தொல்லைகளிலிருந்து விடுவிக்கவந்த கருணாமூர்த்திகள். இந்தச் சின்னப் பிரச்சினையை நமக்குத் தருவார்களா ?

அதனால் 'யாரைவேண்டுமானாலும் நீநின்ற இடத்திலிருந்தே தரிசிக்கலாம்' என்று ஒரே இடத்தில் கூடியிருக்கிறார்கள்......

ஆம்: நாம் அவர்களைத் தேடிச்சென்றால், ஒரே இடத்தில் கூடிநிற்கிறார்கள் அருள்சுரக்க.

அங்கு நின்று தெற்கே பார்த்தால் தீர்த்தம். திரும்பி வடக்கே பார்த்தால், அம்பாள் பாலாம்பிகையான தையல் நாயகி. மேற்கே பார்த்தால் கொடிமரம். தென்மேற்கே பார்த்தால் கற்பக விநாயகர். கிழக்கே பார்த்தால், மேற்குநோக்கி சந்நிதிகொண்டிருக்கும் வைத்தியநாதப்பெருமான். அருகில் அம்பாளுக்கும் சுவாமிக்கும் நடுவே செல்வமுத்துக்குமாரசாமி! அவர்கள் அப்படிக்கூடிநிற்பதால்தான் நம்பிரார்த்தனை அங்கு கைகூடிவருகிறதோ அங்கே !

அங்கேநின்று தொழும்போது, நம்மீது அமுதப்பிரவாகமாக பஞ்சநதியும் ஒவ்வொரு திக்கிலிருந்து பெருக்கெடுத்துவந்து நம்மை ஆட்கொள்வதுபோல்—

ஒவ்வொரு மூர்த்தியின் ஈர்ப்பிலும் நாம் கரைந்து, புனிதப் படுவதுபோல் நெகிழ்ந்துநிற்கிறோம்.

நம் நோக்கில் அனைத்து மூர்த்திகளும் ஒரேசக்தியுள்ளவர்களாக இருப்பினும், அந்தத் தெய்வக் குடும்பத்தில் ஒரே ஒருவருக்குத்தான் செல்வம் அதிகம்.

அவர்தான் முருகவேள் !

அம்பாளும் சுவாமியுமே அவருக்குத்தான் அதிக செல்வாக்கைக் கொடுத்திருக்கிறார்கள். விழா, விசேடம் எல்லாவற்றிலும் அவருக்குத்தான் தனி மரியாதை, (தொடரும்)

திருவெண்டுறைத் தலச் சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், திருவாசக உரைமணி,

வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ..

தஞ்சை மாவட்டத்தில் மன்னார்குடித் தாலூகாவில் மன்னார் குடியிலிருந்து கிழக்கே 10. கி. மீ. தூரத்தில் இத்தலம் உள்ளது. சோழ நாட்டுக் காவிரித் தென்கரைத் தலங்களில் 112 ஆவது தலம்.

மன்னார்குடியிலிருந்து வடபாதிமங்கலம் செல்லும் பேருந்து களில் ஏறினால் இத்தலத்தை அடையலாம். நகரப்பேருந்துகளும் (நெ. 13) உள்ளன. அல்லது மன்னார்குடியிலிருந்து கோட்டூர் திருத்துறைப்பூண்டி செல்லும் பேருந்துகளில் ஏறி, சேரி ஐயனார் கோயிலடி என்னும் வடிவாய்க்கால்கரையில் இறங்கி, வட கிழக்கே 1. கி. மீ. தூரம் சென்றால் கோயிலை அடையலாம். மன்னார்குடியிலிருந்து திருவெண்டுறை வரை நல்ல தார்ச்சாலை உள்ளது.

தலப்பெருமை :

திருஞானசம்பந்தர் அருளிய தேவாரத் திருப்பதிகம் ஒன்றைப் பெற்றது. பிருங்கி முனிவர் வண்டு உருவம் எடுத்து மாதொரு கூறராய் விளங்கிய இறைவனது திருமேனியின் இடையே துளைத்துச்சென்று வலம் வந்து இறைவனை மட்டும் வழிபட்டு அம்பிகையால் சாபம் எய்தி வண்டுருவாயிருந்து வழிபட்டு நற்கதியுற்ற பதி. கருப்பஇல்லின் உட்பக்கத்தில் வண்டின் ஒலி இன்றும் கேட்கின்றது என்று கூறுகின்றனர். வித்தியாதரர் பூசித்த தலம். பிரமதேவர் இத்தலத்து இறைவரை வழிபட்டுப் படைப்புத் தொழில் பெற்றார் என்றும் துருவன் வழிப்ட்டு நல்லருள்பெற்றான் என்றும் அங்கவன், அரிச்சந்திரன், தியாகசோழன், மீனராசகுமாரன், தியாகவர்மன் வழிபட்டு இறை அருள்பெற்றனர் என்றும் திருமால் இத்தலத்து இறைவரை வழிபட்டுச் சிவபூசையின் சிறப்பை உலகுக்கு உணர்த்தினார் என்றும் இத்தல புராணம் இறைவனது பெருமையை விரித்துக் கூறுகிறது. இத்தலத்துக்கு அருகில் மேற்கே திருப்பாதாளீச்சர மும் (பாமணி) கிழக்கே கோட்டூர், திருக்களர் ஆகிய திருத்தலங் களும் உள்ளன.

கோயிலமைப்பு :

திருவெண்டுறை அழகிய சிறிய கிராமம். திருவெண்டுறை நாதர் திருக்கோயில் இவ்வூருக்குப் பெருமை சேர்க்கிறது. கிழக்குப்பார்த்த சந்நிதி. கோயிலின் வடபால் தாமரைத்தடாகம் விளங்குகிறது. கோயில் தேவக்கோட்டை திரு. சோமசுந்தரம் செட்டியார் செய்த கருங்கல் திருப்பணியைப்பெற்று அழகுற விளங்குகிறது. மூன்றுநிலைகளுடன்விளங்கும் சிறிய இராஜ கோபுரத்தைக்கடந்து ஆலயத்திற்குள் செல்வோம்.

இராஜகோபுரத்திற்குத் தென்பால் அலுவலகம் உள்ளது. அதையடுத்து திருமடைப்பள்ளி. ஒரே பிராகாரம். வலமாக வந்தால் தென்மேற்கில் விநாயகர் எழுந்தருளி யுள்ளார். இவ் விநாயகர் மதாமோதகணபதி என வழங்கப்பெறுகின்றார். வடமேற்கில் முருகக்கடவுள் எழுந்தருளியுள்ளார். வடக்கே வசந்த மண்டபம் உள்ளது. கீழைத் திருமாளப்பத்தியில் பைரவர், சம்பந்தர், சனிபகவான், பிக்ஷாடனர், சூரியன், சந்திரன், நவக்கிரகங்களின் திருவுருவங்கள் உள்ளன. பிக்ஷாடனர் பழமையும் அழகும் பொருந்திய மூர்த்தியாக விளங்குகிறார். கோஷ்டங்களில் தெற்கே விநாயகர், தக்ஷிணாமூர்த்தி. மேற்கே இலிங்கோத்பவர். வடக்கே பிர்மா, துர்க்கை உள்ளனர்.

சுவாமி சந்நிதியில் நந்தி பலிபீடங்கள் உள்ளன. அதை அடுத்து மகாமண்டபம் உள்ளது. இம்மண்டபத்தின் வடபால் அம்பாள் கோயில் தெற்கு நோக்கி உள்ளது. மகாமண்டபத்தில் தலவரலாற்று ஓவியங்கள் காட்சி தருகின்றன. ஸ்நபன மண்டபத்தில் தெற்கே சோமாஸ்கந்தர் தனிவிமானத்தில் விளங்குகிறார். வடக்கேபஞ்சமூர்த்திகளும் நடராசரும் எழுந்தருளியுள்ளனர்.

துவாரவிநாயகரை வழிபட்டுத் திருவெண்டுறை நாதரைத் தரிசிப்போம். ஞானசம்பந்தர் இப்பெருமானைப் பாடிப்பரவிய திருப்பதிகத்தை ஓதி வழிபடுவோம்.

“ பாரிய லும்படி யான்படி யார்க்கும் அறிவரியான்
சீரிய லும்மலையாள் ஒரு பாகமும் சேர வைத்தான்
போரிய லும்புரமூன் றுடன் பொன்மலை யேசிலையா
வீரிய நின்று செய்தான் விரும்பும்மிடம் வெண்டுறையே”

என்பது இத்தலத் தேவாரம். திருவெண்டுறைநாதரை வழிபட்டு வேனெடுங்கண்ணியை வணங்குவோம். அம்பிகை அழகே

திருவுருவாய் அமைந்து உள்ளத்தைத் திருவருள் இன்பத்தில் திளைக்கச்செய்கின்றார். வழிபட்டு இறையருள் பெறுவோம்.

மூர்த்திகள் :

சுவாமிதிருப்பெயர் திருவெண்டுறைநாதர். வண்டுறைநாதர் எனக்கொண்டு வடமொழியில் பிரமரேசுவரர் என வழங்கப் பெறுகிறார். பிரமபுரீசர், மதுவனேசுவரர் என்ற பெயர்களு முள்ளன. அம்பிகை திருப்பெயர் வேனெடுங்கண்ணி. இப் பெயர் இத்தலத்தேவாரத்தில் 'வார்சடையான் வேலன கண்ணி யொடும் விரும்பும் இடம் வெண்டுறையே' எனக் குறிக்கப் பெற்றுள்ளது. வடமொழியில் சத்தியாயதாட்சி, பிரகதாம்பாள் என வழங்கப்பெறுகின்றார். விநாயகர் மதாமோதகணபதி எனப்படுகிறார். தீர்த்தம் பிரமபுரீசதீர்த்தம். கோயிலின் வடபால் உள்ளது. தலமரம் – வில்வம்.

தேவாரத் திருப்பதிகம் :

இத்திருத்தலத்திற்கு ஸ்ரீ திருஞானசம்பந்தர் அருளிய தேவாரத் திருப்பதிகம் ஒன்றுஉள்ளது. சிவபெருமான்பெருமை கள் பலவற்றையும் எடுத்துக்கூறி அப்பெருமான் விரும்பி உறையும்தலம்திருவெண்டுறை என்கிறது இப்பதிகம். இறைவன் பிருங்கி முனிவர்க்காக மாதொருகூறனாய் விளங்கிய நிலையைக் குறிக்கும் வகையில் இத்தலத்தேவாரத் திருப்பதிகத்தில் 1, 2, 4, 5, 8 ஆம் பாடல்கள் அமைந்துள்ளன. இத்தலத்து அம்பிகை யின் திருப்பெயராகிய வேல்நெடுங்கண்ணி என்னும் திருப் பெயர் 2ஆம்பாடலில் இடம்பெற்றுள்ளது. இயமனை உதைத்தது, திரிபுரமெரித்தது, இராவணன் கயிலைமலையை எடுத்தது,திருமால் பிரமர் அறிதற்கரியவனாய் விளங்கியது முதலிய புராண வரலாறு கள் திருப்பதிகத்துள் இடம் பெற்றுள்ளன. இத்திருப்பதிகத்தை ஓதி வழிபடுவார் வினைகளினின்று நீங்கப்பெற்று வீடுபெறுவர் எனக் கூறப்பட்டுள்ளது.

புராண வரலாறுகள்

பிரமன் படைப்புத் தொழில் பெற்றது :

உலகத்தையும் உயிர்களுக்கான பலவகை உடல்களையும் படைக்க முற்பட்ட பிரமதேவனுக்குப் படைப்புத்தொழிலில் தடை ஏற்பட்டது. பிரமன் சிவலிங்கப்பெருமானை இத்தலத்தில் வழிபட்டுத் தான் செய்யமுற்பட்ட படைத்தற்றொழில் தடை யின்றி நிகழவேண்டுமெனப் பிரார்த்தித்தான். பெருமான்

சிவசக்தி சமேதராய்க்காட்சியளித்து இவ்வுருவிலேயே தம்மைத் தியானித்துப் படைத்தல் தொழிலை மேற்கொண்டால் உலகமும் ஆணும் பெண்ணுமாகத் தடையின்றி அமையும் எனக் கூறப் பிரமனும் அவ்வண்ணமே பெண்ணொர்பாகனை வணங்கித் தன் தொழிலில் சிறப்புப்பெற்ருன் என்று கூறுகிறது தலபுராணம்.

துருவன் பூசித்தது :

துருவமன்னன் நாரதர் உபதேசப்படி இத்தலத்தை அடைந்து திருவைந்தெழுத்தை ஓதி இறைவனுக்குரிய வழிபாடுகள் பல வற்றையும் இயற்றி நல்லருள் பெற்ருன்.

பிருங்கி முனிவர் வரலாறு :

இத்தலத்துக்குரிய சிறப்புமிக்க வரலாறு இது. திருக்கயிலா யத்தில் முனிவர்களில் பெருமைமிக்கவராகிய பிருங்கி முனிவர் சிவபெருமானைத்தவிர வேறு தெய்வத்தைத் தொழுதல்கூடாது என்ற வைராக்கிய பக்தியை உடையவராய்ச் சிவபெருமானை மட்டுமே வலம் வந்து வணங்கிநின்ருர். உமையம்மை இம் முனிவன் யாவன்? நம்மைச் சிறிதும் மதியாது சிவபெருமானை மட்டும் வழிபடுகின்ருனே என்று அம்முனிவனது உடலில் சக்தி யம்சமாக உள்ள உதிரம் சதை முதலிய கூறுகளை அகலும்படிச் செய்தார்.

பிருங்கி முனிவர் என்பும் நரம்புமே தன்னுடலில் நிற்கத் தோற் பதுமைப்போலக் கால்தள்ளாடி நின்று பெருமானைப் பிரார்த்தித்தார். இறைவன் முனிவர்மீது இரக்கம்கொண்டு இன்னொருகாலை உண்டாக்கி உதவினர். பிருங்கிமுனிவர் களித்துக் கூத்தாடி பெருமான் திருமுன்நின்று பாடிப்பரவினர். உமையம்மை இறைவனைவேண்டி அவரதுதிருமேனியில் இடது பாகத்தைப் பெற்று மாதொரு கூறரானர். அப்படியும் பிருங்கி முனிவர் சிவமும் சக்தியும் மலரும் மணமும் போலப் பிரித்தற் கரியவர் என்பதை உணராது வண்டுருவம் எடுத்துத் திருமேனி யில் ஒருபாதியைத் துளைத்துக்கொண்டு சிவபெருமானைமட்டுமே வழிபட்டார். உமையம்மை சிவமின்றிச் சத்தியில்லை ; சத்தி யின்றிச் சிவமில்லை ; இரண்டையும் பேதப்படுத்திக் காணுதல் கூடாது என்ற உண்மையை உணர்த்தி வண்டு உருவாகவே ஒரு சதுர்யுகம் திருவெண்டுறையில் எங்களை இணைத்து வழிபட்டுப் பாவம்நீங்குக என்றருள முனிவரும் உண்மை உணர்ந்து இத்தலத்தில் இருவரையும் வழிபட்டுப் பாவம் நீங்கி வீடுபேறுற்ருர் என்பது வரலாறு.

அங்கவன் வழிபட்டது :

துருவமன்னனது மரபில் வந்தவன் அங்கவன். இம்மன்னன் செய்த தீய செயல்களால் அவன் ஆட்சிக்குட்பட்ட நாடு மழை வளம் குன்றிப் பஞ்சத்தால் துயருற்றது. துன்புற்ற மன்னன் நாரத முனிவரின் கட்டளைப்படி இத்தலத்தை அடைந்து இறைவனை வழிபட்டுப் பாவவிமோசனம் அடைந்தான். இறைவனருளால் மழை பொழிந்து நாடு செழிக்க நல்லாட்சி புரிந்து இனிது வாழ்ந்தான்.

அரிச்சந்திரன் வழிபட்டது :

அயோத்தியை ஆண்டுவந்த புகழ்பெற்ற அரிச்சந்திரன் வசிட்டரின் உபதேசப்படி 'வாய்மை தவறுமை' என்னும் நல்லறத்தைக் கடைப்பிடிக்க விரும்பி இத்தலத்தை அடைந்து இறைவனை வழிபட்டு அவ்வறத்தைத் தன் ஆயுட்காலம் வரை கடைப்பிடிக்கும் மன உறுதியைப் பெற்ருன்.

தியாகசோழன் பேறுபெற்றது :

முசுகுந்த சோழ மன்னனின் மகன் தியாகசோழன் அவனது அமைச்சன் புத்திசாகரன். இருவரும் மகப்பேறின்றித் தியாகேசனை வழிபட்டுவந்தனர். மன்னன் மனைவியும் அமைச்சனின் துணைவியும் இறையருளால் கருவுற்றனர். தங்கட்குப் பிறக்கும் பிள்ளைகள் ஆணும் பெண்ணுமாயிருந்தால் மணம் முடிப்பதாக உறுதி செய்துகொண்டனர். அரசனுக்கு மீன் உருவுடைய புதல்வன் பிறந்தான். அமைச்சனுக்கு அழகுள்ள பெண் பிறந்தாள். அதைஅடுத்து அமைச்சனுக்கு இரண்டு பெண்களும் ஒரு புதல்வனும் பிறந்தனர். மணப்பருவம் வந்தபோது அமைச்சனின் பெண் தனக்குச் சிந்தாமணி கொண்டுவந்து தருபவரை மணப்பேன் என்ருள். மீனராஜன் இத்தலத்தை அடைந்து இறைவனை வழிபட்டுச் சிந்தாமணியையும் ஒளி உருவத்தையும் அடையப்பெற்று அமைச்சனின் மகள் கமலையை அடைந்து மணந்து மகிழ்வுற்ருன்.

மீனராசன் யாத்திரை சென்றபோது விந்தியமலைச் சாரலில் கொடிய அசுரன் ஒருவனேடு போரிட்டு அவனை வென்று அவ்வசுரனல் சிறையிடப்பட்ட இரத்தினகாந்தி என்னும் அரசிளங் குமரியை விடுவித்தான். அப்பெண்ணின் தந்தையது வேண்டுகோளை ஏற்று இரத்தினகாந்தியையும் மணந்து இன்புற்று வாழ்ந்தான்.

திருமால் வழிபட்டது :

திருமால் மகப்பேறு வேண்டிச் சிவபெருமானை மட்டும் வழிபட்டார். பெருமான் அழகிற் சிறந்த மன்மதனை மகவாக அருளினர். அம்பிகை தன்னைத் திருமால் வழிபடாமையால் மன்மதன் சிவபெருமானது நெற்றிவிழியால் அழியுமாறு சாபந் தந்தார். பின் தன் தவற்றை உணர்த்த திருமால் இத்தலத்தில் விநாயகர் சோமாஸ்கந்தர் ஆகியோரை வழிபட அம்பிகை சினந்தணிந்து, இறக்கும் உன்மகன் மீண்டும் பிழைத்தெழுவான் என்று அருள்புரிந்தார்.

சிவநாமாவளி இசைப்பாடல்

திருமுறைக்கலாநிதி,

வேலூர், திரு. க. சொக்கலிங்க ஓதுவார்.

இராகம் – சண்முகப்பிரியா] [தாளம் – ஆதி

பல்லவி

அரசினை ஒப்பார் வேறு ஆருளரோ — இந்த
அவனியில் குறுக்கையர் வேளாண் குலம்வந்த (அரசி)

அனுபல்லவி

புரம்எரித்த அண்ணல் புகழ் தனையே
பொன்மொழி யாயதமிழ் நன்மொழி யாலேசொல் (அரசி)

சரணம்

மறைகள் சாத்திட்ட மறைக்கத வைத்தமிழ்
மறையால் திறந்திட்ட மறைமுனியே அன்பு
நிறைகனியே தமிழ் நிதிமலையே புவி
துறந்தார் தமக்குத் துறைகாட்டு ஆமூர் (அரசி)

கல்லொடு பிணைத்துக் கடலிட்ட போதினும்
நல்லசோ றென்றுபால் நஞ்சுசோ றுண்டும்
வல்லமணர் வஞ்சகர் வதைத்திட்ட போதும்தமிழ்
சொல்லியே துன்பம் தொலைத்திட்ட அன்பன்நா (அரசி)

கட்டுரை எண். 26

அபிராமி அந்தாதி

புலவர். திரு. K. சந்தானராமன், M A., B. Lit.
D. P. P. A,. D. U. N., I. U.

பின்னே திரிந்துன் அடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்று கொண்டேன், முதல்மூவருக்கு
அன்னே! உலகுக்கு அபிராமி என்னும் அருமருந்தே!
என்னே இனி, உன்னையான் மறவாமல்நின் றேத்துவனே.

அ. முதல் மூவருக்கும் அன்னே!

(1) "முதன்மை பெற்ற மும்மூர்த்திகளுக்கும் தாயே!" என அழைக்கிறார்.

(2) பிரமன், விஷ்ணு, உருத்திரன் ஆகிய மூவரும் முறையே படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலுக்கும் முதன்மை பெற்று விளங்குவதாலும், உலக சிருஷ்டியின் போது அம்மூவரும் முதலில் தேவியிடமிருந்து வெளிப்பட்டு வந்தமையாலும் முதல் மூவருக்கும் அன்னே! என்றார்.

(3) ஆதியில் பராசக்தி "நான் பலவாக ஆவேன்" என சங்கல்பம் (விருப்பம்) கொண்டு முதலில் மும்மூர்த்திகளையும் படைத்தாள். அவர்களுக்கு ஏற்ற சக்திகளான வாணி, லட்சுமி, கௌரி ஆகியோரையும் படைத்து அவ்வவர் தொழில்களில் ஈடுபடுத்தினாள், என்ற வரலாறுகள் தேவிபாகவதம், தேவி மகாத்மியம் போன்ற நூல்களில் விரிவாகக் கூறப்படுகின்றன.

(4) பிரளய வெள்ளத்தில் மிதுந்த விஷ்ணுவைத்தாலாட்டி வளர்த்தாள் என்பதனை முன்னரே கண்டோம் அத்துடன் மூவருக்கும் திருமணம் முதலிய செய்து வைத்துத்தாயினைப் போலவே மகிழ்ந்தாள். ஆதலால் "மூவருக்கும் அன்னே!"

(5) மூவரும் தோன்றக்காரணமாய் நின்றாள் ஆதலால் மீனாட்சியம்மைப்பிள்ளைத்தமிழ் அவளை 'மும்முதற்கும் வித்தே' என அழைக்கிறது.

ஆ. உலகுக்கு அபிராமியென்னும் அருமருந்தே!

(1) இவ்வுலகினில் அபிராமி என்னும் பெயருடன் எழுந்தருளி விளங்கும் அருமருந்து அனையவளே! அதாவது வானமுது அல்லது சஞ்சீவி போன்றவளே!

(2) முத்தொழிற்கும் முதன்மையான மூவரையும் முன்பு பெற்ற உயர்வும் சிறப்பும் உடையவள் தனது கருணையினால் இவ்வுலகில் திருக்கடவூரின்கண் எழுந்தருளி அரிய மருந்து போல் விளங்கி வருகிறாள்.

(3) பிணியாகவும் பிணிக்கு மருந்தாகவும் முன் பாடலில் கூறினார். இங்கு 'அருமருந்து' என்கிறார். அன்னையின் சந்திர காந்தக்கல் போல் விளங்கும் திருமேனியிலிருந்து அமுதக் கிரணங்கள் வீசுகின்றன. அத்திருமேனியினைத் தியானிக்கும் அடியார் தனது பார்வையினாலேயே விஷயங்களையும், ஜுரங்களையும் போக்கடித்து விடுகிறார் என சௌந்தரிய லகரி கூறுகிறது. அவளைத் தியானிக்கும் அடியவரின் பார்வைக்கே நோய் நீக்கும் ஆற்றல் உண்டெனில் அதனை அளிக்கும் அபிராமி 'அருமருந்து' எனப் போற்றப்படுவதில் வியப்பில்லை.

இ. பின்னே திரிந்து............கொண்டேன்.

(1) உனது அடியவர்களின் பின் சென்று வழிபட்டுப் பிறவித் தொடரினை அறுக்கும் வழியினை முன்னரே முயன்று தவமியற்றி அடைந்தேன்.

(2) 'பணியேன் ஒருவரை' என்றவர் இங்கு 'அடியாரின் பின்னே திரிந்து பேணுவேன்' என்கிறார். இதனால் அவரது செருக்கின்மையும், மெய்யடியார்கள் மாட்டுள்ள மதிப்பும் ஈடுபாடும் தெளிவாக விளங்குகிறது.

(3) "ஸத்ஸங்கத்வே நித்ஸங்கத்வம்" எனத் தொடங்கும் ஆதிசங்கரரின் ஸ்லோகத்தின்படி அடியார் சேர்க்கையே முத்திக்கு முதல்படியாகும். அடியார் தொடர்பால் தீக்குணங்களும் தீயார் இணக்கமும் விடுபட்டு, அதனால் மோகம் ஒழிந்து அதனால் ஜீவன் முத்தியே கிட்டுகிறது என்பது ஆதிசங்கரரின் வாக்கு.

ஆகவே, பிறப்பறுக்க முதல்படி அடியாரைப்பேணல் என்பதனை அறிந்த அபிராமிபட்டரும் பின்னே திரிந்து

அடியாரைப் பேணி ....என்றார். நம்சமயத்துடன் மாறுபட்ட கருத்துள்ள புத்தநெறியின் முதல்மந்திரமும் "சங்கம் சரணம் கச்சாமி" – "அடியார் குழுவை சரணடையப் போகிறேன்" என்பதுதான். மற்றும் அம்பிகை வழிபாட்டில் அடியார் கூட்டத்தினை "குருமண்டலம்" எனப் பேணிப் பூஜித்தல் ஒரு முக்கிய அம்சமாகக் கருதப்படுகிறது.

(4) 'திரிதல்' என்ற சொல் ஒரு லட்சியமின்றி அலைதல் எனப் பொருள்படும். அன்னை வழிபாட்டினையும், குறிக்கோளாகக் கொண்டவர்தான் அபிராமிபட்டர். அடியார்களைப் பேணும் பொழுது அவர்கள் எங்கெங்குச் செல்கிறார்களோ, அங்கங்கெல்லாம் சென்றும் அவர்கள் கருத்தே தன்கருத்தாய்க் கொண்டு இயங்கியும் வந்த நிலையினைக் குறிப்பிடவே இங்குத் 'திரிந்து' என்கிறார். அல்லது 'குருபரம்பரா' மரபினைப் பின்பற்றிச் செல்லுதலையே அங்ஙனம் 'திரிதல்' என்றார் எனவும் கூறுவர்.

(5) அடியாரைப் பேணத் தொடங்குதல் இறுதியில் பிறப்பறுக்கும் நிலையில் கொண்டுவிட்டு விடும். ஆனால் அடியாரைப் பேணும் வாய்ப்பும் பிறப்பறுக்கும் நிலையும் முன்னைத்தவத்தாலேயே வாய்க்குமாதலால் முன்னே தவங்கள் முயன்று கொண்டேன் என்றார்.

(6) சகஸ்ரநாம பலச்ருதிப் பகுதியும் லலிதாத்ரிசதியின் பலச்ருதிப் பகுதியும் பல பிறவிகளில் பல தெய்வங்களை வழிபட்ட சிறப்புடையவர்களுக்கே 'இனிப் பிறவியில்லை' என அமையும் கடைசிப் பிறவியிலேயே அன்னையினை வழிபடும் வாய்ப்புக்கிடைக்கும் எனக்குறிப்பிடுகின்றன.

(7) தவம் செய்யக் கடும் முயற்சி தேவை. இன்னல்கள் இடையூறுகளைத் தாங்கி மேலும் மேலும் முயன்று செய்தல் வேண்டும். அதனைப் பல தவத்தோர்களின் வரலாறுகள் மூலம் அறிகிறோம். ஆகவே தவத்திற்கு அவசியத்தேவை முயற்சி. "செய்தவம் ஈண்டு முயலப்படும்" என்றார் திருவள்ளுவரும். பிரிதோர் இடத்தில் அபிராமிபட்டரும் 'தவமுயல்வார் முத்தியும்' என்பார் "முன்னே தவங்கள் முயன்று கொண்டோன்" என்ற என்ற சொற்றொடர் இக்கருத்தினைத் தெளிவாகுகிறது.

(8) அம்முயற்சியால்தவம் புரிந்து அடியாரைப் பேணலும், அன்னை வழிபாடும், பிறப்பறுக்கும் இறுதிப் பிறப்பும் எய்தி விட்டது என்பதனை முழுமையாக நம்புகிறார். அவற்றினை அடைந்துவிட்ட உறுதியில் 'கொண்டேன்' என்கிறார்.

ஈ. (இனி) யான் உன்னை மறவாமல் நின்றுஏத்துவானே!

(1) இப்பிறவியில்உன்நினைவுஒழியாது உனதுவழிபாட்டில் அசையாது நின்று போற்றிப் புகழ்ந்து வாழ்வேன்.

(3) பல பிறவிகளில் முயன்று பெற்ற உனது வழிபாட்டில் உன்னையும் இப்பிறவியில் என்றும் மறக்கமாட்டேன். இது தான் இறுதிபிறவியாயிற்றே! இனி ஏன் முயலவேண்டும்? என்ற அலட்சிய நோக்கு ஏற்படின் அது மீண்டும் கீழ்நிலையில் தள்ளிவிடும். கடும் முயற்சி பயனற்றுப் போய்விடும். எனவே என்றும் நின்னை மறவாது புகழ்ச்சி செய்து அடியாரைப் பேணியே வாழ்வேன்.

(3) இறைவனிடம் பிறவாமையினை வேண்டிப் பின் அடுத்ததாக அவனை என்றும் மறவாமையினை வேண்டிய காரைக்காலம்மையாரின் வேண்டுகோள் இங்கு நினைவு கூறத் தக்கதாகும். முன்னே தவங்கள் முயன்று பெற்றவற்றினை எல்லாம் - இன்ப சுகங்களில் இறைவனை மறந்த பிழையால் இழந்த பல அசுரர்களின் வரலாறுகள் அதனைத்தானே நமக்கு எச்சரிக்கின்றன!

(4) வாய்மட்டும் இறைவியினை ஏத்திப் புகழ மனம் உலகி யலில் சிதறுமாயின் அவ்வழிபாடும் பயனில்லை. சிந்தை ஒன்றி அசையாநிலையில் வழிபடுதல் வேண்டும். அதனால் மறவாமல் 'நின்று' ஏத்துவனே என்றார்.

(5) பூவுலகத்தில் இறைவனைப் போற்றிப் புகழ்தல் (நாம சங்கீர்த்தனம் செய்தல்) மிக்க பலன் தருமென்றும் அதுவும் கலியுகத்தில் அமமுறையே எளியதும் சிறந்ததும் ஆகும் எனவும் சான்றோர் கூறுவர். ஆகவே 'ஏத்துவனே! என்றார்.

உ. என்னே இனி!

(1) எனக்கு இனி வேறு என்ன இருக்கிறது?

(2) அடியாரைப் பேணுதல், பிறப்பறுக்கும் நிலை நின்னை நின்று ஏத்தும் மனம் ஆகிய அனைத்தும் எய்திவிட்ட பிறகு இனி எனக்கு என்னகுறை இறுக்கிறது? வேறு என்ன பணி இருக் கிறது? சரபோஜி போன்ற மன்னர்களாலும் மற்றவர்களாலும் ஆகவேண்டியது என்ன இருக்கிறது? 'இவர் பித்தர்', 'இவர் மதுவருந்துபவர்', இவர் துர்தேவதைஉபாஸகர்', என்றெல்லாம்

ஊரார் கூறினல் எனக்கு என்ன குறைவந்து விடும்? ஆகிய பல பொருள்களை "என்னே இனி?" என்ற வினு கொடுக்கிறது.

(3) இங்கு உரையாசிரியர் திரு. முருகவேள் அவர்கள் அழகான எடுத்துக் காட்டினைச் சுட்டிக்காட்டியிருக்கிருர்.

"எமக்குத் துணைவர்கள் சிவனடியார்கள்
எம் கைகள் நினக்கே பணி செய்தல்
எப் போதும் நினது திருக்காட்சி"

இவற்றினை நீ எமக்கு நல்கிவிட்டால் ஈசனே! எமக்கு ஆதவன் எங்கு உதித்தால் என்ன? (எங்கு எழில் என் ஞாயிறு எமக்கு?) என பாவைப்பெண்கள் பாடும் கருத்தினையே "என்னே இனி?" என்ற வினுவும் குறிப்பிடுகிறது.

அருமருந்தான அமுத கிரணங்களைப் பொழியும் அன்னை யினைக் குறிப்பிடும் ஆதிசங்கரரின் சௌந்தரியலகரி ஸ்லோகத் தில் விளக்கவுரையில் பிருமஸ்ரீ தேதியூர் சுப்ரமணியசாஸ்திரிகள் அவர்கள் கீழ்க்கண்ட பாராயண பலனைக் குறிப்பிடுகிருர்.

"அமுதமயமான திருமேனியழகினைக் குறிப்பிடும் இந்த ஸ்லோகத்தை விஷம், ஜுரம் ஆகிய நோய்களால் அவதிப் படுவோரின் பொருட்டு குறைந்தது பதினறு முறை 'விபூதி' அல்லது 'தீர்த்ததில்' அபிமந்தரித்துக்கொடுத்தால் அன்னையின் அருளால் அவை நீங்கும்"

"உலகுக்கு அபிராமி என்னும் அருமருந்தே!" என வரும் இப்பாடலின் பாராயண பலனும் அஃதேயாகும்.

குறிப்பு :—

இது போன்ற சிறு பிரயோகங்களுக்கு மந்திர உபதேசம் முதலியன அவசியமில்லை. அன்னையிடம் ஈடுபாடும் நம்பிக் கையுமே அவசியம். எனினும் பெரிய பிரயோகங்கள் செய்ய குருமுகமான உபதேசமும் மந்திரதீட்சையும் மிகவும் அவசியம் என்பது முன்னேர் கருத்து.

“ வில்லியும் – பாரதியும் ”

புலவர் திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ.

(மலர் 41. இதழ் 4, பக்கம் 169 இன் தொடர்ச்சி)

பெண்மையை, வாய்மூடி மௌனியாக நிறுத்தாது, காரண–காரிய அறிவோடு பேசவைத்து மகிழவும் பாரதியாருக்கு பாஞ்சாலி சபதம் வாய்ப்பளிக்கிறது. மூலக்கதை வழி வில்லி அமைத்த இடம் ஒன்று பாரதிக்கு அறிவார்ந்த உண்மையை விதந்து பேச வாய்ப்பினை நல்குகின்றது. பாஞ்சாலியைப் பகடையாடித் தோற்கிறுன் தருமன். அவளைச் சபைக்கு அழைத்துவருக எனக் கட்டளை இடுகிறுன் துரியன். அருகில் நின்ற பிராதிகாமி கட்டளையை ஏற்றுப் போகிறுன். வில்லி இதனை நீ நனி விரைவின் ஓடிச்சென்று அவன் இருந்த கோலத் தெரிவையைக் கொணர்தி என்று துரியன் கற்றுக அமைக்கிறுர் அச்சமோ, அன்றி பாஞ்சாலி பால் கொண்ட அன்போ தெரியவில்லை; பிராதிகாமி பாஞ்சாலி இருப்பிடம்போவது போல் பாசாங்கு செய்துவிட்டுத் துரியனிடம் வந்து அவள் கூறியனவாகச் சிலவற்றைப் படைத்து மொழிகின்றுன். வாத்திறமையோடு அவன் பேச்சு வில்லியில் அமைகிறது.

“ என்னைத் தோற்று மனுநெறிகூர்
இசையோன் தன்னைத் தோற்றுனே;
தன்னைத் தோற்றுத் தனது மனத்
தளர்வால் என்னைத் தோற்றுனே;
முன்னைத் தோற்றத் தோற்றபொருள்
முற்றும் கவரும் முறையன்றிப்
பின்னைத் தோற்ற பொருள்கவரப்
பெறுமோ ? நினைக்கப் பெறுது என்றுன் ”

முன்னரே தன்னைத் தோற்றிருப்பானுறல், அவன் அடிமை. அடிமைக்கு உரிமைப்பொருள் உலகில் இல்லை. அங்ஙனமிருக்கத் தான் தோற்றபின் என்னை வைத்தாடித் தோற்க அவனுக்கு உரிமை இல்லையென பாஞ்சாலி பேசியதாகப் – பிராதிகாமி கூறுவதாகப் படைக்கிறுர் வில்லி.

மூலக்கதையில்மாற்றமின்றி இதனைப்படைத்த வில்லியைப் பாரதி படித்திருக்க வேண்டும். சட்டங்கள் செய்து–பட்டங்கள் ஆளந் பெண்ணைத் தகுதிப்படுத்த நினைக்கும் பாரதிக்குக்

கருத்துமிக்க வாதமொன்றைப் பிராதிகாமி செய்ததாகப்படைத்ததை ஏற்க இயலவில்லை. புதுமைப்பெண்ணுக்குப் பிராதிகாமியின் உணர்வுகள் இருக்கக்கூடாது என்று யார்கூறுவது; பாரதி இந்தவாதத்தைப் பிராதிகாமியிடமிருந்து மாற்றிப் பாஞ்சாலியே செய்ததாகக் களம் அமைக்கிருர். விஸ்வரூபமெடுத்துப் பெண்மை சீறிச் சிலிர்ப்பதைப் பாஞ்சாலி சபதத்திலே படித்து வியக்கிறேம்;

எல்லாருங்கூடி இருக்கும் சபைதனிலே
நின்னை அழைத்துவர நேமித்தான் எர்மரசன்;

இது பிராதிகாமி பேச்சு; பாஞ்சாலி சீறுகின்ருள் :

என்ன உரைத்திடலும், யார்சொன்ன வார்த்தையடா ;
சூதர் சபைதனிலே தொல்சீர் மறக்குலத்து
மாதர் வருதல் மரபோடா; யார் பணியால்
என்னை அழைக்கின்ருய் ? என்ருள்; அதற்கு அவனும்
மன்னன் சுயோதனன்தன் வார்த்தையினுல் என்றிட்டான் ;

அறிவு வாதத்தைப் பாஞ்சாலி தொடங்குகின்ருள்.

" நல்லது நீ சென்று நடந்த கதை கேட்டுவா;
வல்ல சகுனிக்கு மாண்பிழந்த நாயகர்தாம்
என்னே முன்னே கூறி இழந்தாரோ; தம்மையே
முன்னே யிழந்து முடித்தென்னைத் தோற்ருரோ ?
சென்று சபையில் இச்செய்தி தெரிந்துவா."

பிராதிகாமி போய் இச்செய்தி கூறியதும் சினந்து எழுகிருன் துரியோதனன்; கோபத்தில் அவன், அள்ள இயலாத கீழ்மைகளை வார்த்தைகளாகச் சாய்க்கிருன்;

வேண்டிய கேள்விகள் கேட்கலாம் - சொல்ல
வேண்டிய வார்த்தைகள் சொல்லலாம்;
நீண்ட பெருஞ்சபை தன்னிலே – அவள்
நேரிடவே வந்த பின்பு தான்; – சிறு
கண்டிற் பறவையும் அல்லளே; – ஐவர்
கூட்டு மனைவிக்கு நாணமேன் – சின
முண்டு கடுஞ்செயல் செய்யுமுன் – அந்த
மொய்குழ லாளை இங் கிட்டுவா;

பிராதிகாமி மீண்டும் பாஞ்சாலியிடம் ஓடி அவன் அழைத்ததாக அழைக்கிருன். வில்லியில் விளங்காத வாதத்தின் உள்ளீட்டைப் பாஞ்சாலி வார்த்தைகளால் பாரதி விளக்குகின்ருர்;

நாயகர் தாம்தம்மைத் தோற்றபின் – என்னை
நல்கு முரிமையவர்க்கில்லை – புலைத்
தாயத்திலே விலைப்பட்டபின் –'என்ன
சாத்திரத் தாலெனைத் தோற்றிட்டார்; – அவர்
தாயத்திலே விலைப்பட்டவர் – புலி
தாங்கும் துருபதன் கன்னிநான் - நிலசாயப் புலைத்தொண்டு
சார்ந்திட்பால் – பின்பு
தார முடைமை யவர்க்குண்டோ?

இந்த ஆழமான வரிகளை – வாதங்களைப் பிராதிகாமியிடமிருந்து-பாஞ்சாலிக்கு ஆக்கிக்காட்டும் பாரதியின் பெண் பெருமை பேசும் போக்கு - அவர் காப்பியம் படைத்த உள்நோக்கில் பெண்மை வாழ்வே தலையாயது என்பதனை நமக்கு இனிது விளக்கி விடுகிறது.

காப்பிய ஆசிரியர்களின் வெற்றி – அவர்கள் இயற்கையில் இன்பங்கண்டு நமக்குஎடுத்துக்காட்டும் பேரழகுக்காட்சிகளில் தங்கியிருப்பதைப் பல நேரங்களிலே காணலாம் ; வில்லியின் இயற்கைபாடும் ஆற்றல்பெரிது; சூது போர்ச்சருக்கத்தில் அவர் அதனை நிறைவாக எடுத்துக்கொள்ளவில்லை. பாரதத்தை முழுவதுமாகப் பாடிய வில்லிக்கு வேறு இடங்கள் அமைந்தன. பாரதியின் நிலை வேறு. சூதுபோர்ச்சருக்கத்தை மொழிபெயர்க்க வந்தவரல்லர்பாரதி. அதனையே ஒருமுழுக் குறுங்காப்பியமாக்க நினைத்தவர். எனவே ஒன்றிரண்டு வாய்ப்புக்களில் இயற்கை யழகினைப்பாடி எக்காளமிட்டுமகிழ்கிறார்; அத்திருபுரம்நோக்கிப் பாண்டவர் பெரும் படையுடன் வருகின்றனர். இடைவழியில் சூரியன் மறைகிறான்; சந்திரோதயம் மலர்கிறது; இவற்றை ஐந்தே பாடல்களில் இருபது வரிகளில் வில்லி பாடி முடிக்கிறார்; சூரியன் மறைவதில் வில்லிக்கு இவ்விடத்தே ஒன்றும் கற்பனை இல்லை;

வருந்தினர் இவர்; துயில் வதியவேண்டும் என்று இருந் தபனனும் இவர்க்கு இரவுநல்கினன்; என்று பாண்டவர்களுக்கு ஒய்வு நல்க ஆதவன் மறைந்தான் என இரண்டு வரிகளிலே முடித்துக்கொள்கிறார் வில்லி.

பாரதிக்கு இயற்கை பாட இதுவே இடம்; காலைக்கதிரழகின் கற்பனைகளைக் குயிற் பாட்டில் கொட்டிக் கவிழ்த்தவர். மாலைப் பேரழகை மனம் நிறையப்பாடுகின்றார். மாலைப்போதில் பாஞ் சாலியை அழைத்துக் கொண்டு அர்ச்சுனன் போய் ஒரு பொழி லிலே தங்குகின்றான்; மறையும் பரிதியை இருவரும் தொழு

கின்றனர். மெல்லியல் தனியிடத்தே அவன் தொடைமேல் சாய்கிருள் ; குயிலைப்போல்மொழி பிரற்றுகின்ருள் ; பார்த்தன் பரிதி எழில் விளக்கிப் பேசுகின்ருள் ;

பாரடியோ; வானத்தில் புதுமை எல்லாம்;
பண்மொழி; கணந்தோறும் மாறிமாறி
ஒரடிமற் ருேரடியோ டொத்தலின்றி
உவகையுற நவநவமாயத் தோன்றுங்காட்சி;
யாரடியில் இவைபோலப் புவியின் மீதே
எண்ணரிய பொருள் கொடுத்தும் இயற்ற வல்லார்;

என்று உழக ஓவியர்களாலே தீட்ட முடியாத செவ்வானப் பேரழகைப் பார்த்ததுக்குள் புகுந்து கொண்டு கவிஞர் வியக்கிருர். சத்தி தாசரான பாரதியாருக்கு இந்தப் பரிதி - இதன் சுழற்சி – இதுவினைக்கிம் வண்ணக்காட்கள் யாவுமே சக்தியின் வெளிப்பாடாகவே தோன்றுகின்றன;

அடிவானத் தேயழங்குப் பரிதிக் கோளம்
அளப் பரிய விரைவினெடு சுழலக் காண்பாய்;
இடிவானத் தொளிமின்னல் பத்துக்கோடி
எடுத்தவற்றை ஒன்றுபட உருக்கி வார்த்து
முடிவான வட்டத்தைக்காளி யாங்கே
மொய்குழலாய், சுற்றுவதன் மொய்ம்பு காணுய்;
வடிவான தொன்ருகத் தகடி ரண்டு
வட்டமுறச் சுழலுவதை வனைந்து காண்பாய்;

சூரியன் மறைந்துவிட்டதும் எழுந்த செவ்வானக் காட்சியிலே கவிஞன் கொண்ட ஈடுபாட்டை நமது சொற்களாலே சொன்ஞல் நிறையாது; பாஞ்சாலிக்குக்காட்டிப் பார்த்தன்பேசுகிருன்– இதுகதை – உண்மை பாரதியின் இயற்கை ரசனை – உணர்ச்சிக் கொப்பளிப்போடு பொங்கிவழிகிறது; (தொடரும்)

வார வழிபாடு

முரல் வெண்மதி சூடு முடியுடை
வீரன் மேவிய வேற்காடு
வார மாய்வழி பாடுநி னைந்தவர்
சேர்வர் செய்கழல் திண்ணமே.

— **சம்பந்தர்.**

மதிப்புரை

திருமுருகாற்றுப்படை - உரைக்கொத்து

நச்சினர்க்கினியர், உரையாசிரியர், பரிமேலழகர், கவிப் பெருமாள் பரிதி உரைகள் கூடியது.

தொகுப்பாசிரியர்கள் : வித்துவான் திரு. கே. எம். வேங்கட ராமையா எம். ஏ. பி. ஓ. எல்., வித்துவான் திரு. வே. ரா. தெய்வ சிகாமணிக் கவுண்டர். பக்கங்கள் 175. விலை ரூ, 8—00. வெளியீடு :— அன்னபூர்ணா பதிப்பகம் 7, சன்னிதித்தெரு, திருப்பனந்தாள் 612 504.

தமிழிலக்கியங்களில் முருகப்பெருமானைக் குறித்துப் போற்றிய முதல் தோத்திர நூல் திருமுருகாற்றுப்படை. இதனை அருளியவர் நக்கீரர். சங்க நூல்களில் பத்துப்பாட்டு என்னும் நூற்றொகையுள் முதலாவதாக விளங்கும் இந்நூலைத் தமிழுலகம் நன்றாக அறியும்.

" நக்கீரர் தாமுரைத்த நன்முருகாற் றுப்படையைத்
தற்கோல நாடோறும் சாற்றினால் — முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளி
தான்நினைத்த வெல்லாம் தரும்.

என்னும்வெண்பா இந்நூலின்பெருமையை இனிது உணர்த்தும். இந்நூலின் நுட்பங்களை உணர்தற்கு உதவும் பழைமையான ஐந்து உரைகளுடன் அன்னபூரணா பதிப்பகத்தின் சார்பில் திரு. கே. எம். வேங்கடராமையா எம். ஏ. பி. ஓ. எல்., அவர்களாலும் ஈரோடு திரு. தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்களாலும் தொகுக்கப்பட்ட இந்நூலை இரண்டாம் பதிப்பாகத் திருப்பனந்தாள் அன்னபூரணா பதிப்பகத்தினர் வெளியிடுகின்றனர். முதற் பதிப்பு திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின் சார்பில் வெளிவந்துள்ளது. இரண்டாம் பதிப்பில் கவிப்பெருமாள் பரிதி உரைகள் சேர்க்கப்பெற்றுள்ளன.

பல்கலைக்கழகங்களில் பட்டவகுப்புக்களுக்குப் பாடமாக வைத்தற்கு ஏற்றது. மாணவர்கள் உரை ஒப்பீட்டுமுறைகளை அறிதற்கு உதவுவது. திருமுருகாற்றுப்படையை விரும்பிப் பாராயணம் புரிவோர்க்கு ஏற்றது. தமிழுணர்வும் சமய நூலுணர்வும் உடையோர்க்கு இந்நூல் பெரிதும் பயன்படும். நூலை முறையாகக் கற்பதற்குரிய வகையில் அச்சிட்டுள்ளனர்.

இந்நூல் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபராகிய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களுக்குக் காணிக்கையாக்கித் தம் நன்றியைப் புலப்படுத்தியுள்ளார். வெளியீட்டாளர் திரு. ம. வே. சுவாமிநாதன்.

இத்தகைய தமிழ் நூல்களையும் சமய நூல்களையும் வெளியிடப் பெரும் பொருளுதவி வரும் பெங்களூர் அறநெறிக் கொடையாளர் திரு. ம. வே. ஜெயராமன் அவர்கள் பாராட்டுக்குரியவர். தமிழுலகம் பெற்றுக் கற்றுப் பெரும் பயனுறுக.

— வி. சா. குருசாமி தேசிகர்.

"ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனத்திலிருந்து வெளிவருவது. சமயப் பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத் தொகையைக் கிழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பிவைக்கவும்.

ஆண்டுச் சந்தா உள்நாடு	...	ரூ.	10—00
ஆண்டுச் சந்தா சிலோன்	...	ரூ.	12—00
ஆண்டுச் சந்தா வெளிநாடு	...	ரூ.	23—00
ஆயுள் சந்தா உள்நாடு	...	ரூ.	100—00
ஆயுள் சந்தா வெளிநாடு	...	ரூ.	125—00

செயலாளர் :- ஞானசம்பந்தம் செயலகம், தருமபுரம்,
மாயூரம் 609 001. தஞ்சை மாவட்டம்.

குடமுழ நந்தீசன்

நக்கீரன் வழியடிமை,

புலவர் திரு. பி. மா. சோமசுந்தரம்.

(மலர் 41, இதழ் 4, பக்கம் 195 இன் தொடர்ச்சி)

9. மங்கல வாசகர்

"குசையு மங்கையிற் கோசமுங் கொண்டவவ்
வசையின் மங்கல வாசகர் வாழ்த்தவே
இசைய மங்கையுந் தானுமொன் ருயினன்
விசைய மங்கையுள் வேதியன் காண்மினே"

என்பது ஆளுடைய அரசுகளின் அருண்மொழி. இதன் கண் வரும் மங்கல வாசகர் என்பது மாணிக்கவாசகரைக் குறிப்பது என்பர் ஒருசாரார். இதனை மறுக்கப்புகுந்தார் மங்கலம் என்பது மாணிக்கம் என்று பொருள் படாமையால் மாணிக்கவாசகர் எனல் பிழைபடு பொருளாம் என்பர். வாசகர் என்பது முதற் குறையாய் வருதலை முன்னருங் கூறினும். மங்கலம் என்பது சிவத்தைக் குறிக்கும். எனவே முழுமுதல்வனாகிய சிவ பெருமானைப் பாடும் மாணிக்கவாசகர் என்பது நன்கு பொருந் துவதே என்பர் முற் சார்பினர்.

இனி, கவியரசு கு. நடேசகவுண்டர் மங்கல வாசகர் என்பது மாணிக்கவாசகரைக்குறிப்பதன்று என்பதை வலியுறுத் தப் பின்வருமாறு கூறுவர்.

"இரண்டாவது சான்ருகிய 'குசையு மங்கையிற் கோசமும்' என்ற பாடலை நோக்குவோம். கால ஆராய்ச்சிக் காரர்கள் குசை என்பதற்குத் தருப்பைப்புல் எனவும் கோசம் என்பதற்குப் புத்தகம் என்றும் மங்கல வாசகர் என்பதற்கு மாணிக்கவாசகர் எனவும்பொருள் கூறுவர். அது பொருந்தாது. குசை, கோசம் என்பன திருக் கோயில்களில் பயன்படும் உலோகக்கலன்கள் சான்று: 'Kusa and kosa are the articles used in temples' என்றும் 'O, Syama, my only hope is thy hollowed

name; what use I have of Kusa and kosa' என்று காணப்படுகிறது. (Vide Footnote Page 992 – Gospel of Sri. Ramakrishna).

இவ்வாங்கிலப்பாட்டு இராமகிருட்டிண பரமகம்ச தேவரால் அடிக்கடி பாடப்பட்ட ஒருவங்காள மொழி பெயர்ப்பு. எனவே, குசையுங் கோசமும் புல்லும் புத்தகமும் அல்ல என்பது தெள்ளிதிற் புலனும். மங்கல வாசகர் என்பவர் மாணிக்கவாசகர் அல்லர். ஆசீர் வாதமாகிய (பூசையின்ஒருறுப் பாகிய) வாழ்த்துக் கூறும் அந்தணர்களாவார். வாசகர் என்பது இயல் பாகியபன்மைப்பாலே உயர்த்தற் பொருட்டுக்கூறியது அன்று"

(அப்பர் வரலாற்ருராய்ச்சியும் தேவாரத்திறனுய்வும் - கழகப் பதிப்பு - பக்கம் 144- 145) இம்மறுப்பு வன்மையுடைத்து அன்று. குசையும் கோசமும் புல்லும் புத்தகமும் ஆகா என மறுக்கப் புக்கார் அவை யாவை என விளக்க மாட்டாது சோர்வு பட்டா ராகலின். இவர் காட்டிய வங்கமொழிப் பாடலின் ஆங்கில மொழிபெயர்ப்பு, அவை கோயில்களில் பயன்படுத்தப்படும் பொருள்கள் என்றே கூறவும், இவர் அவற்றை உலோகக் கலன்கள் என்று கொண்டதும் வியப்பே. அஃதே பொருள் என்று கொண்டாலும் அவைகட்குத் தமிழ்ப் பெயர்கள் இல்லையா? தமிழ்நாட்டுக் கோயில்களில் பயன்படுவன அன்ரு? பயன்படுவனவேல் கூறியிருக்கலாமே. வங்கமொழிப் பாடலைத் துணைக்கழைப்பானேன்? பயன்படாதன எனில் விசையமங்கையிற் பயன்பட்டன என்று அப்பர் கூறுத லென்னே? இத்துணை வினுக்களுக்கும் இவர் கூற்று இடந்தரல் காண்க. எனவே அடிக்குறிப்பாக வரையப்பட்ட ஆங்கில விளக்கம் தெளிவாக இல்லாதிருந்தும் அதைத்துணைக்கொண்டு குசையுங் கோசமும் புல்லும் புத்தகமும் அன்று என்று இவர் மறுக்கப்புக்கது வியப்பை விளைவிக்கிறது. அப்பர் பெருமான் கருத்து' புல்லும் புத்தகமுமேயல்லாது இவர் கூறுமாறு பூசைக் குப்பயன்படும் உலோகக் கலன்களாகா என்பதைக் கீழ்வரும் பாடலே உணர்த்தும்.

"கோலும் புல்லு மொருகையிற் கூர்ச்சமுந்
தோலும் பூண்டு துயரமுற் றென்பயன்
நீல மாமயி லாடு துறையனே
நூலும் வேண்டுமோ நுன்னுணர்ந் தோர்கட்கே"

இப்பாடற்கண் வரும் நூல் மெய்ந்நூல்களை (சாத்திரம்) உணர்த்தும். பூணூல் என்று கோடல் சிறப்பிற்றன்று. பூணூல் உலகுழல்வார்க்கே உரித்து. துறவியாய் இறைநெறி நிற்பார்க்கே வேண்டுவதொன்றன்று. துறவறத்தில் நின்றேரும் இறைநெறி, இறைநிலை என்பவற்றைத் தெளிந்து மெய்ந்நூல் காட்டும் ஒழுக்கத்தில் நிற்பான் வேண்டி அவற்றைப் பயிலுதலும் ஆய்தலும் வேண்டி நிற்பர். இறைவனை உணர்ந்தார்க்கு அந்நூல்களும் வேண்டுவதன்று என்பார் நூலும் வேண்டுமோ என்றார் என்க.

ஆயின் மங்கல வாசகர் என்பது மாணிக்கவாசகரே என்று நிறுவல் கூடுங்கொல்லோ எனின் அதன் பொருள் அஃதன்றாகவும் அவ்வாறு நிறுவல் வேண்டுங்கடப்பாடு யாதோ என்க. யாம் மேலே உரைத்தவை குசையுங் கோசமும் புல்லும் புத்தகமும் ஆகா என மறுக்கப் புக்கார் விளக்கம் மயலுரையாய் வன்மையிழந்து படுவதே என்பதையே காட்டுவ என்க.

இனி, மங்கலவாசகர் என்பது ஆசீர்வாதமாகிய (பூசையின் ஒருறுப்பாகிய வாழ்த்துக் கூறும் அந்தணரைக் குறிக்கும் என்பதும் கொள்ளத் தக்கதன்று.

சேரமான் பெருமாள் நாயனர் அருளிச்செய்ததிருக்கயிலாய ஞானவுலாவின் 25 – ஆம் கண்ணி,

“ ஆங்கி கமழ்தூப மேந்த யமன் வந்து
மங்கல வாசகத்தால் வாழ்த்தெடுப்ப ”

எம்பிரான் திருவுலாவுக்கு எழுந்தருளினன் என்று கூறுவதால் மங்கலவாசகம் பூசையின் ஒருறுப்பாகாமை பெறப்படும். அன்றியும் 25 – ஆம் கண்ணி

“ எண்ணருங் கீர்த்தி எழுவர் இருடிகளும்
அண்ணல்மேல் ஆசிகள் தாம் உணர்த்த ”

என்றுரைப்பதால் (பூசையின் ஒருறுப்பாகிய) ஆசிர்வாதமாகிய வாழ்த்துக் கூறுதலன்று மங்கலவாசகம் என்பது உறுதிப்படும். 48 – ஆம் கண்ணி. ‘ மங்கலம் பாடுவார் வந்திறைஞ்ச ’ என்பதும் நோக்குக. மங்கலவாசகம் என்பது நன்மொழி எனப் பொருள்படும். மங்கல வாசகத்தால் வாழ்த்தெடுத்தலாவது “ நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க ” என்று ஓதுவதை ஒத்தது என்று தெளிக.

இதனால் மங்கலவாசகர் வேறு' மாணிக்கவாசகர் வேறு என்பது விளக்கப்பட்டது. மங்கலவாசகர் என்பது மணிவாசகரைக் குறிக்க வேண்டுமேல் பாடலில் அதற்குரிய குறிப்பும் காணப் படல் வேண்டும் என்பதறிக.

10. முடிப்புரை

இதுகாறும் கூறியவற்றால்

(அ) குடமுழா நந்தீசனை வாசகனாகக் கொண்டார் என்னும் அப்பர் பெருமானின் திருமொழி மாணிக்கவாசகரைக் குறிப்பதே எனவும்

(ஆ) அது மாணிக்கவாசகரைக் குறியாது என்போர் வாசகன் என்ற சொல்லுக்கு வாயிலன் 'என்பது முதல் அகராதி கூறும் அத்தனை பொருள்களையும் இயைத்தும் மெய்ப் பொருள் காணமாட்டாது மயல்வலைப் பட்டாராயினர் எனவும்

(இ) சுந்தரனைத் துணைக் கவரி வீசக் கொண்டார் என்று அப்பர் அருளிய தொடர் சுந்தரமூர்த்திகளைக் குறிப்பதே எனவும்

(ஈ) மங்கலவாசகர் என்ற சொற்றொடர் மாணிக்கவாசகரைக் குறிப்பதன்று எனவும்பூசையின் ஒருறுப்பாகிய ஆசிர்வாத மாகிய வாழ்த்துக் கூறும் அந்தணர்களை அத்தொடர் குறித்தது என்பது மேற்கோள் இல்லாத பிழையான கருத்து எனவும் குசையுங் கோசமும் புல்லும் புத்தகமுமே எனவும் நன்கு நிறுவப்பட்டமை அறிக.

சிவபோகசாரம்

சித்தி தருநாதன் தென்கமலை வாழ்நாதன்
பத்தி தருநாதன் பரநாதன்—முத்திப்
பெருநாதன் ஞானப் பிரகாசன் உண்மை
தருநாதன் நம்குருநா தன்.

— ஸ்ரீ குருஞானசம்பந்தர்

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

திருக்கடவூரில் :

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் ஆண்டு ஜன்மநக்ஷத்திர ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு, திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரர் திருக்கோயிலில் மிருத்யஞ்சய ஹோமம், ஏகாதசருத்ர ஜபம் முதலியவற்றுடன் 1—5—82 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ அமிர்தகடேசுவரர், ஸ்ரீ அபிராமி அம்மை ஆகிய மூர்த்திகட்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் அர்ச்சனையும் ஸ்ரீ காலசம்ஹார மூர்த்திக்கு, சகஸ்ரநாம அர்ச்சனையும் நடைபெற்றன. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளிவழிபாடாற்றி, நாண்மங்கல விழாமலராக "சைவ சமய சாதனங்கள்" என்றநூலை வெளியிட்டு, அன்பர்கட்குப் பிரசாதம் வழங்கி ஆசி அருளினர்கள்.

திருவெண்டுறையில் :

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் ஜன்ம நக்ஷத்திரமாகிய ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு 1—5—82 அன்று திருவெண்டுறை, ஸ்ரீ வெண்டுறைநாதர் திருக்கோயிலில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. சுவாமி அம்பாளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. தலத்திருப்பதிகங்கள் பாராயணம் செய்யப்பெற்றது. வித்துவான் திரு. சொ. முத்தையன் எம். ஏ., அவர்கள் சொற்பொழிவு ஆற்றினர். அச்சிடப்பெற்ற தலத்திருப்பதிக நூல். வழிபாட்டிற் கலந்து கொண்ட அன்பர்கட்கு வழங்கப்பெற்றது. அன்பர் பலர் வழிபாட்டில் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

ஸ்ரீ உமாபதிதேவ நாயனுர் குருபூஜை.

சந்தான குரவருள் நான்காமவராகிய ஸ்ரீ உமாபதிதேவ நாயனுர் குருபூஜை விழா சித்திரை அஸ்தநாள் கூடிய 5—5—82 புதன்கிழமை நடைபெற்றது. தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரி

சுவரர் கோயிலில் எழுந்தருளியுள்ள சமயாசாரியர், சந்தானு சாரியர்களுக்குக் காலை 9 மணியளவில் அபிஷேகஆராதனைகள் நிகழ்ந்தன. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி வழிபாடாற்றினர்கள். தருமையாதீனத்தின் சார்பில் சிதம்பரம் கொற்றவன்குடி ஸ்ரீஉமாபதிதேவ நாயனர் திருமடத்தில் பகலில் அபிஷேக ஆராதனைகளும், மாலை 6 மணியளவில் தில்லைத் திருக் கோயிலில் ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு சகஸ்ரநாம அர்ச்சனை யும் நடைபெற்றன. தருமை ஸ்ரீஞானபுரீசுவரர் திருக்கோயிலில் மாலை 7 மணியளவில் வித்துவான் திரு. வி. சா. குருசாமிதேசிகர் எம். ஏ., 'திருவருட்பயன்' பற்றியும் வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் பி. லிட். 'சிவப்பிரகாசம்' பற்றியும் சொற்பொழி வாற்றினர். அன்பர் பலர் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

குருவருளும் அருளுபதேசமும்

தருமையாதீனத் திருமடத்தில் ஒவ்வொரு ஆங்கில மாதத் திலும் முதல் ஞாயிற்றுக்கிழமையன்றுகாலை சரியாக10-மணிக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை அன்பர்கள் வழிபட்டு அருளுபதேசம் பெறும் பிரார்த்தனை வழிபாட்டுக் கூட்டம் நிகழ்ந்து வருகின்றது. 2—5—82 ஞாயிறன்று 12ஆவது வழி பாட்டுக் கூட்டம் நிகழ்வுற்றது. காலை 10 மணியளவில் தொடங்கி, கூட்டுப் பிரார்த்தனையை அடுத்துத் தருமையாதீன வேத சிவாகம பாடசாலைத் தலைமையாசிரியர் 'ஆகமம்' பற்றிய பல விளக்கங்களைக் கூறினர். தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் "கிரியைகளைச் சரியாகச் செய்தால் ஞானம் கிடைக்கும்; அனுட்டானம், பூசை முதலியவற்றில் அவசரம் காட்டாது சரியாகச் செய்ய வேண்டும்" என்றும் உபதேசித்து "நீ இயக்க ஓர் பொருளை நிச்சயித்த நாயேனும்" எனத் தொடங்கும் ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருட்பாடலை உலகியல் எடுத்துக்காட்டுக்கள் மூலம் விளக்கி ஆசியருளி னர்கள். மாயூரம் நகரப் பெருமக்களும் அன்பர்களும் கலந்து பயன்பெற்றனர். அடுத்த பிரார்த்தனைக் கூட்டம் 6—6—82 முதல் ஞாயிறன்று நிகழ இருக்கிறது. அன்பர்கள் கலந்து கொண்டு பயன்பெறுவார்களாக.

ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள் குருபூஜை விழா.

தருமபுரத்தில்:

தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி திருக்கோயிலில் ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள் சதயநாள் குருபூஜை விழா

19—4—82 திங்கட்கிழமையன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது. காலை 8 மணியளவில் சமயாசாரியார், சந்தானசாரியர்களுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடு ஆற்றினர் கள். இரவு ஆதீன ஓதுவாமூர்த்திகளின் பண்ணிசைப் பாராய ணத்துடன் திருவீதியுலா நடைபெற்றது. திருவீதியுலாவின் போது அற்புத விளக்கச் சொற்பொழிவுகள் நிகழ்வுற்றன.

திருவாமூரில் :

ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள் அவதரித்த திருத்தலமாகிய திருவாமூரில் ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூஜை விழா தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுளப் பாங்கின்வண்ணம் 17, 18, 19—4—82 ஆகிய மூன்றுநாட்களிலும் சிதம்பரம் கனகசபைநகர் ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூஜை விழாக் குழுவினரால் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ் விழாவின் மூன்று நாட்களிலும் திருமுறை இசையரங்கம், கருத் தரங்கம் முதலிய பல நிகழ்ச்சிகள் சிறப்பாக அமைந்தன. 19—4—82 சதயநாள் அன்று தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தில் எழுந்தருளி வழிபாடாற்றினர்கள். விசேஷ அபிஷேக ஆராதனைகளுக்குப் பின்னர் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் கொள்ளிடம் தேவார ஆசிரியர் திரு C. S. குமாரசாமி பிள்ளை அவர்களுக்குத் "திருமுறைக்கலாநிதி" என்னும் பட்டம் வழங்கிப் பொன்னாடை போர்த்திப் பொற்கிழி அளித்து, ஆசியருளினர்கள். வழிபாட்டிற்கு வந்திருந்த அன்பர் கட்கு அருட்பிரசாதம் வழங்கினர்கள். இரவு 10 மணியளவில் ஸ்ரீ அப்பர் சுவாமிகள் திருவீதியுலாக்காட்சி திருமுறைப் பாரா யணத்துடன் நிகழ்வுற்றது.

சித்திரைப் பெருவிழா

சீகாழியில் :

தருமையாதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீசட்டைநாத சுவாமி தேவஸ்தானத்தில் 27—4—82 முதல் சித்திரைத்திருவிழா தொடங்கி நடைபெற்றது. 28—4—82 இரண்டாம் திருநாள். அன்று திருமுலைப்பால்விழா. அன்று காலை தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீகுருமகாசந்நிதானம்அவர்கள் தரிசனத்திற்கு எழுந்தருளி இருந்தார்கள், ஸ்ரீ திருஞானசம்பந்த சுவாமிகள் சிவிகையில் எழுந்தருளியவுடன் தருமையாதீனம்ஸ்ரீலஸ்ரீகுருமகாசந்நிதானம்

அவர்கள் "திருமுலைப்பால்திருவிழா"வின் தத்துவத்தினைவிளக்கி ஆசியருள, கும்பகோணம் தொழிலதிபர் திரு. என். காசிராமன் பி. எஸ். ஸி., அவர்கள் அற்புத விளக்கச் சொற்பொழிவுகளைத் தொடக்கிவைத்தார்கள். திருச்சுற்று வலம்வரும்போது அற்புத விளக்கச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. பிரமதீர்த்தக் கரைக்குப் பெருமான் எழுந்தருளியானதும் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் மதுரை திரு. வ. ஈஸ்வர ஓதுவார் அவர்களுக்குத் "திருமுறைக்கலாநிதி" என்ற பட்டம்வழங்கிப் பொன்னுடை போர்த்திப் பணமுடிப்பும் வழங்கி ஆசியருளினார்கள்.

திருவிழாநாட்களில் மாலையில் கருத்தரங்கங்கள், பட்டிமன்றம், வழக்காடுமன்றம், திருமுறை வகுப்பு ஆண்டுவிழா. இன்னிசையரங்கம், பொம்மலாட்டம் முதலிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அன்பர்கள் கலந்துகொண்டு சுவாமிதரிசனம் செய்தும் நிகழ்ச்சிகளைக் கேட்டும் பயனுற்றனர்.

திருக்கடவூரில் :

தருமையாதீனத்திற்குச்சொந்தமான திருக்கடவூர்ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் (27—4—82) அன்று தொடங்கிச் சித்திரைப் பெருவிழா நடைபெற்றது. (2—5—82) காலசம்ஹாரத் திருநாள் அன்று தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்கட்குப் பிரசாதம் வழங்கியருளினார்கள். விழாநாட்களில் சொற்பொழிவுகளும் இன்னிசை விரிவுரையும், பொம்மலாட்டமும், திருமுறை-தேவாரவகுப்பு ஆண்டுவிழாவும் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

திருப்பனந்தாளில் :

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் (27-4-82) முதல் சித்திரைப் பெருவிழா மிகச்சிறப்பாக நடைபெற்றது. உற்சவ நாட்களில் சமயச் சொற்பொழிவுகள் இன்னிசை நிகழ்ச்சிகள் நிகழ்வுற்றன. அன்பர்கள் சுவாமிதரிசனம் செய்தும் சொற்பொழிவுகள் கேட்டும் பயனுற்றனர்.

திருவையாற்றில் :

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருவையாறு ஸ்ரீ ஐயாறப்பர் திருக்கோயிலில் சித்திரைப் பெருவிழா (27—4—82) முதல்

தொடங்கி நடைபெற்றது. உற்சவ நாட்களில் இன்னிசை விரிவுரைகளும் சமயச் சொற்பொழிவுகளும் நடைபெற்றன. அன்பர் பலர் இறைவழிபாடு ஆற்றியும், சொற்பொழிவுகளைக் கேட்டும் பயனுற்றனர்.

ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றம்

மாயூரம் கிளை :

மாயூரம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றத்தின் ஸ்ரீ குரு ஞானசம்பந்தர் வார வழிபாட்டுப் பிரிவின் நிறைவுவிழா (3—5—82) திங்களன்று தருமையாதீன மடாலயத்தில் நடைபெற்றது. பணிமன்ற அன்பர்கள் காலை 9 மணியளவில் தருமையாதீனம் ஸ்ரீ சொக்கநாதப் பெருமானைப் பூசைமடத்தில் தரிசித்தனர். 10 மணியளவில் தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரர், ஸ்ரீ தருமபுரீசுவரர், ஸ்ரீ மகாலட்சுமி துர்க்கா பரமேஸ்வரி ஆலய வழிபாடு செய்தனர். மாயூரம் பணிமன்ற வார வழிபாட்டுப் பிரிவின் சார்பில் வாரந்தோறும் நிகழும் கூட்டுவழிபாட்டின்பின் மாயூரம் வித்துவான் திரு. பூவராகம்பிள்ளை B. A. B. Ed. அவர்களால் நிகழ்த்தப் பெற்றுவந்த திருத்தொண்டர் புராண விரிவுரையைத் தருமையாதீனத் திருமடத்தில் நிறைவு செய்த போது தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் சமயத் தொண்டுகளைப் பாராட்டி ஆசியருளினூர்கள் " சிவாலய வழிபாட்டு முறையும் தோத்திரங்களும் " என்ற நூல் வெளியீடு நிகழ்வுற்றது. அன்பர் பலர் விழாவிற் கலந்து கொண்டு திருவருளும் குருவருளும் பெற்றனர்.

வைத்தீசுவரன்கோயிலில்

நகரத்தார் குழுவினர் பாத யாத்திரை

செட்டிநாட்டு நகரத்தார் குழுவினர் ஆடவர் மகளிர் இருபாலாராக ஆயிரம்பேர் செட்டிநாட்டிலிருந்து ஸ்ரீ வைத்தீசுவரன்கோயிலுக்குப் பாதயாத்திரை செய்து 20—4—82 அன்று தமது வழிபாட்டை நிறைவுசெய்து கொண்டனர். பல்லாண்டுக் காலமாகச் சித்திரை முதற் செவ்வாய்த்தினத்தன்று தங்கள் வழிநடைப் பயணத்தை முடித்து வழிபட்டுவரும் இந்த நிகழ்ச்சியில் இவ்வாண்டு தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி, குழுவினரை வழிபாடு செய்வித்து அருளுரை வழங்கியது குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்.

மதுரை ஸ்ரீ மீனாட்சிசுந்தரர் கோயில் அறங்காவல்குழுத் தலைவர் திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் நகரத்தார் குழுவினர் சார்பில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை வரவேற்றார். வைத்தீசுவரன்கோயில் சுவாமி, அம்பாள், ஸ்ரீமுத்துக்குமாரசுவாமி, மற்றைய மூர்த்திகளையும் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களோடு சிறப்பு வழிபாடு செய்துகொண்டனர். ஸ்ரீ சண்முகர் சந்நிதியில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தலைமையில் சிறப்பு வரவேற்புக் கூட்டம் நிகழ்ந்தது. வித்துவான் ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்றுப்பேசினார்கள். அறங்காவல் குழுத்தலைவர் திரு. வி. எஸ். சிதம்பரம் செட்டியார் நகரத்தார் சார்பில் வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துப் பேசினார். ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் அருளாசி வழங்கி அருளுரையாற்றினார்கள்.

மதுரை வித்துவான் திரு. தா. குருசாமி தேசிகர் நன்றியுரை நவின்றார். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் உத்திரவுப்படி வழிப் பயணக் குழுவினர் ஆயிரவர்க்கு நண்பகல் உணவு வழங்கி, அனைவர்க்கும் திருவருட்பிரசாதம் வழங்கினார்கள். நகரத்தார் குழுவினரின்பொறுப்பானவர்கட்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களால் மரியாதை செய்யப்பட்டன. திரு. வி. எஸ். சிதம்பரம் செட்டியார் இலங்கையில் நடைபெறும் உலக இந்து மாநாட்டில் கலந்துகொள்ளச் செல்லுவதைமுன்னிட்டு, ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பொன்னாடைபோர்த்தி ஆசி வழங்கினார்கள்.

சிவபோகசாரம்

அருவும் உருவும் அருவுருவும் அல்லா
ஒருவ னுயிர்க்குயிரா யோங்கித்—திருவார்
கமலைவரு ஞானப்ர காசனென வந்தே
அமலபதந் தந்தெனையாண் டான்.

— ஸ்ரீ குருஞானசம்பந்தர்.

உ

எதிர்காலம்

★

ஜோதிஷம் திரு. A இராசமாணிக்கம்
ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(துந்துபிஃ வைகாசிமீ 1உ முதல் 31உ முடிய)
(15—5—1982 முதல் 14—6—1982 முடிய)

சு		கு. பு	ரா
	இராசி		
சந்			
ல/ கே		கு	செ சனி

	பு ராகு	சந்	ல/ சனி
செ	அம்ஸம்		
கு சூ			
சு		கே	

ஸ்ரீ துந்துபி ஃ சித்திரை மீ 31 உ சுக்கிரவாரம் திருவோண நக்ஷத்திரம் பத்திரை கரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 39 நாழிகை 4 விநாடிக்கு தனுர் லக்கினத்தில் ஸ்ரீ லோக ரட்சகரான சூரிய பகவான் லோகசுபிட்சார்த்தத்தை முன்னிட்டு மேஷ ராசியிலிருந்து ரிஷப ராசி சங்கிர மணமாக வைகாசி மாதப் பிரவேசம் செய்தருளுகின்ருர். அன்று விஷ்ணுபதி புண்ணிய காலமாகும். மறுதினம் ஸ்திரவாரம் வைகாசி மாதம் முதல் தேதியாகிறது. சங்கிரமணகாலகிரகஸ்திதியின் பலனுவது லோகத்தில் அத்தியாவசியப் பொருள்களின் விலைவாசி குறைந்து வரும். லோகெங்கும் பொதுநலதர்மங்களாக ஆலயத் திருப்பணிகள் தெய்வ பிரதிஷ்டை சம்ரோட்சணம் ஆகிய புண்ணிய கைங்கர்யங்கள் ஆன்ருேர்களால் வெகுவாக நடைபெற்று வரும். தேசங்களில் ஆளுநர்கள் இறைவனருள் கடாக்ஷத்தினுல் தர்மநெறியில் நல்லாட்சி நடத்திப்பிரஜைகளை இரட்சிப்பார்கள்

உலகில் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் சிவ ராஜ போகத்தில் திருவீற்றிருக்கின்ற சிவஞான குருமகான்கள் சிவசைவ ஆசார விதிமுறைகளை லோகத்திற்கு திருவாய்மலர்ந்து போதனைசெய்து அருள்வார்கள். தேசங்களில் எங்கும் தேவால யங்களில் நித்தியம் ஆறு கால பூசைகள், சிறப்பு பூசைகள் வசந்தோற்சவ வைபவங்கள் விஷேசமாக நடைபெற்றுவரும். பிரஜைகள் தெய்வ பக்தியினால்மனம் தெளிவுற்று க்ஷேமகரமாக வாழ்வார்கள்.

1. மேஷம் :- அசுவதி - பரணி. கார்த்திகை - ¼

(சு. சே. சோ. லா. - லி. லு. லே. லோ. - அ.)

மேஷராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பணவருமானம் கனிசமாக வரும். இல்லத்தில் சுபவிசேஷம் நடக்கும் நீர் இயந் திர சாதனங்களில் நற்பலன் ஏற்படும். வித்துவத்துவம் கலைத் துறைகளில்பிரபலஸ்திதியாகும். எல்லாக்காரியங்களும் எண்ணி யபடி வெற்றிகரமாக நடைபெறும். வியாஜ்ஜிய வழக்கில் ஜெயம்ஏற்படும். தாரபுத்திரர்களின்சௌக்கியம் நன்றாக இருந்து வரும், மே 15, 16, 17, 21, 22, 25, 26, 31 ஜுன் 1, 2, 3, 4, 9. 10, 11, 12, 13, 14 தேதிகளில் விசேஷமானபலனைத் ஏற்படுத்தும். ஜுன் 5, 6, 7, தேதிகள் சந்திராஷ்டமம் மற்றதேதிகளில் மத்திம பலன் தரும்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி - மிருகசீர்ஷம் ½

(இ. ஊ. ஏ. - ஒ. வ. வி. வூ. - வே. வோ.)

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். குடும்ப அபி விருத்தியில் பணவருமானம் கணிசமாக வரும். சுபமான வற்றில் பெரும்தொகை செலவும் ஆகும். வித்துவத்துவம் கலைத் துறைகளில் நன்மதிப்பை ஏற்படுத்தும். வீடுவாகன பிராப்தியில் மே 25தேதி ஆறுல் நல்லனஏற்படும். புத்திரனுக்குச் சுகம்தரும் தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். மே 16, 17, 18, 19, 20, 23, 24, 27, 28 ஜுன் 3, 4, 5, 6, 7, 12, 13, 14 தேதிகளில் நற்பலன் களை ஏற்படுத்தும். ஜுன் 8, 9, தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

3. மிதுனம் :- மிருகசீர்ஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾

(கா. கி. - கு. க. ங. ச்சா. - கே. கோ. ஹ.)

மிதுனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பணவருமானம் வந்துக்கொண்டிருக்கும். சகோதரர் பிதா இவர்களின் நலனில் செலவீனை ஏற்படுத்தும். நவீன சாதனங்களில் பொருள் முடங்கும். தாரபுத்திரர்களின்

நலம் நன்ருக இருந்துவரும். இராசிக்கு நெஞ்சில் வலி ஏற்பட்டு உடன் குணமாகும். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு அருச்சனை செய்ய நலம் தரும். மே 18, 19, 20, 21, 22, 25, 26, 29, 30 ஜூன் 5, 6, 7, 8, 9 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். மே 15 ஜூன் 10, 11, 12 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

(ஹி. - ஹூ. ஹே. ஹோ. ட. - டி. டு. டே. டோ.)

கடகராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்பாபி விருத்தியில் பணவருமானம் வந்து நிறையும். ஆடை ஆபரண பிராப்தி, வாகனபிராப்தி, சுகம் ஆகிய நற்பலன்களையளிக்கும், எல்லாக்காரியங்களையும்மன உறுதியாக நிறைவேற்றுதல்ஆகும். அரசாங்கத் தொடர்புள்ள விஷயங்களில் அனுகூலங்களை ஏற்படுத்தும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்து வரும். மே 15, 21, 22, 23, 24, 27, 28, 31 ஜூன் 1, 2, 8, 9, 10, 11, 12 தேதிகளில் எல்லாவற்றிலும் ஸ்லாக்கிய பலனை ஏற்படுத்தும். மே 16, 17, 18 ஜூன் 13, 14 தேதிகள் சந்திராஷ்டமம், மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼

(ம. மி. மு. மே. - மோ. ட. டி. டு. - டே.)

சிம்மராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபி விருத்தியில் பணவருமானம் கணிசமாக வந்துசேரும். மே 25 தேதி ஆனல் இல்லத்தில் மங்கள நிகழ்ச்சி ஏற்படும். எல்லாக்காரியங்களும் சிக்கலின்றிச் சித்தியாக நடைபெறும். தாரபுத்திரர்களுக்கு சௌக்கிய பலன் தரும். மே 15, 16, 17 23, 24, 25, 26, 29 30 ஜூன் 3, 4, 10, 11, 12, 13, 14 தேதிகளில் பிரபல அந்தஸ்து, ஜெயம், வைபோக நிகழ்ச்சி, சந்துஷ்டி ஆகிய நற்பலன் ஏற்படுதல் ஆகும். மே 19, 20 தேதிகள் சத்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

(டோ. ப. பி. - பு. ஷ. ண. ட. - பே. போ.)

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிர பலனக நடக்கும் குடும்ப அபிவிருத்தியில் பண வருமானம் பெருமதிப்பில் வந்து சேரும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் புகழ்தரும். நீர் இயந்திர சாதனங்களில் விருத்தி நிலைமையாகும். மே 25 தேதி ஆனல் பிணி நீங்குவதாகும். பூர்வசொத்தில் ஓர் நற்பலன்

வரும். எல்லாக் காரியங்களும் கெடியாக நடைபெற்றுக்கொண்டிருக்கும். மே 16, 17, 18, 19, 20, 25, 26, 27, 28 ஜூன் 1, 2, 5, 6, 12, 13, 14 தேதிகளில் தனதாயாதி நற்பலன்களையளிக்கும். மே 21, 22 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

7. துலாம் :- சித்திரை $\frac{1}{2}$ – சுவாதி - விசாகம் $\frac{3}{4}$
(ர. ரி. – ரு. ரே. ரோ. தா. – தி. து. தே.)

துலாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் வரும். அடிக்கடி மிதமிஞ்சிய செலவும் ஏற்படும். சனி சகஸ்ரநாம அருச்சனை செய்ய அல்லல் தீரும். தாரபுத்திரர்களுக்கு சௌக்கியம் தரும். எல்லாக் காரியத்தையும் புத்தி சாதுரியத்தில் நடத்துதல் ஆகும். அரசாங்க காரியங்களை செவ்வையாக நடத்திக்கொண்டிருக்கும். மே 19, 20, 21, 22, 27, 28, 29, 30 ஜூன் 3, 4, 8, 9 தேதிகளில் தனதாயாதி நற்பலன்களையளிக்கும். மே 23, 24 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

8. விருச்சிகம் :- விசாகம் $\frac{1}{4}$ – அனுஷம் – கேட்டை.
(தோ. - ந. நி. நு. நே. – நோ. ய. யி. யு.)

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். குடும்ப அபிவிருத்தில் பண வருமானம் இரண்டு வகையில் வந்து சேரும். பூமியில் இயந்திர சாதனங்களில் விருத்தி பலன் ஏற்படும். இல்லத்தில் சுபகாரியங்கள் நடக்கும். புத்திரர் பௌத்திரர்களுக்கு சுகம் தரும். மனைவிக்கு சிரோபாதை வந்து உடன் குணமாகும். மே 15, 21, 22, 23, 24, 29, 30, 31 ஜூன் 1, 2, 5, 6, 10, 11, 12 தேதிகளில் தனதாயாதி நற்பலன்களையளிக்கும். மே 25, 26 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

9. தனுசு :- மூலம் – பூராடம் – உத்திராடம் $\frac{1}{4}$
(யே. யோ பா. பி. - பு. த. ப, ட. – பே.)

தனுர்ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். குடும்ப அபிவிருத்தியில் நல்ல பணவருமானம் வரும். சகோதரர் அம்மான்களின் நலம் நன்றாக இருந்துவரும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் அரசாங்க நன்மதிப்பை உண்டுபண்ணும். வீடு வாகன பிராப்தியில் நற்பலன் ஏற்படும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்து வரும். மே 16, 17, 23, 24, 25, 26,

31 ஜூன் 1, 2, 3, 4, 8, 9, 13, 14தேதிகளில் தனதாயாதி நற்பலன் களையளிக்கும். மே 27, 28 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

10. மகரம் :- உத்திராடம்¾ - திருவோணம் - அவிட்டம் ½
(போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி.)

மகரராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பணவரவு செலவு சரிசமனாக இருந்துவரும் வெள்ளைக்கல் பதித்த ஆபரணம் ஒன்று வாங்குதல் ஆகும் மே 25 தேதி ஆனல் கட்டிட பிராப்தியில் வாகனத்தில் நல்லன ஏற்படும். புத்திரர் அல்லது புத்திரிக்கு சுபம் ஏற்படும். தாம் பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். மே 15, 19, 20, 25, 26, 27, 28 ஜூன் 3, 4, 5, 6, 7, 10, 11 தேதிகளில் தனதாயாதி நற்பலன் களையளிக்கும். மே 29, 30 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾
(கு. கே, - கோ. ஸ. ஸி. ஸு. - ஸே. ஸோ. தா.)

கும்பராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். குடும்ப அபிவிருத்தியில் நல்ல பண வருமானம் வந்துசேரும். சகோதரருக்கு உயர்வு ஏற்படும். வீடுவாகனங்களில் நல்ல சௌகரியம் தரும். நாகரீக வஸ்துக்கள் வாங்குதல் ஆகும். வித்தியாவியாபாராதிகலைத்துறைகளில்விசேஷபலன்ஏற்பட்டுக் கொண்டிருக்கும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். மே 16, 17, 21, 22, 27. 28, 29, 30 ஜூன் 5, 6, 7, 8, 9, 13, 14 தேதிகளில் தனதாயாதி நற்பலன்களையளிக்கும். ஜூன் 1, 2 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

12. மீனம்:- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.
(தி. - து. ஸ. ச. த. - தே. தோ ச. சி.)

மீனராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்ப அபிவிருத்தியில் பண வருமானம் வந்துக்கொண்டிருக்கும். பொதுநலச் சேவையில் ஈடுபடுத்தும். வித்துவத்துவம் கலை துறைகளில் அரசாங்க நன்மதிப்பைதரும். வீடுவாகன பிராப்தியில் பூமி பிராப்தியில் பரிவர்த்தனையாகும். மனைவியின் உடல் நலம் பாதிக்கினும் உடன் குணமாகும். புத்திரர் பௌத்திரர்களுக்கு சௌக்கிய பலன் தரும். மே 15, 19, 20, 23, 24, 29, 30, 31 ஜூன் 1, 2, 8, 9, 10, 11 தேதிகளில் தனதாயாதி நற்பலன்களையளிக்கும். ஜூன் 3, 4 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

வைகாசி மாதச் சிறப்பு நாட்கள்

20—5—82 வியாழன், பிரதோஷம்.
21—5—82 வெள்ளி, மாதசிவராத்திரி.
22—5—82 சனி, தருமை ஸ்ரீ சண்முகர் கிருத்திகை அபிஷேகம். கிருத்திகை விரதம். சர்வ அமாவாசை.
23—5—82 ஞாயிறு, வேளூர்க் கிருத்திகை.
26—5—82 புதன், ஆச்சாள்புரம்,திருக்குவளை,வைத்தீசுவரன்கோயில், மதுரை, மாயூரம் முதலிய தலங்களில் வைசாக உற்சவம்
27—5—82 வியாழன், சேக்கிழார் குருபூஜை.
28—5—82 வெள்ளி, சோமயாஜி யாகம், ஆயில்யவிழா. அக்னி நக்ஷத்திர நிவிருத்தி 33-35 திருப்பனந்தாள் ஸ்ரீமத் அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் மாகேசுவரபூஜை.
30—5—82 ஞாயிறு, வைசாகப் பெருவிழாவில் ரிஷபவாகனக்காட்சி.
1—6—82 செவ்வாய், வைசாகப்பெருவிழாவில் திருக்கல்யாணவிழா.
2—6—82 புதன், தருமை ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி மகோற்சவ அனுக்ஞை முதலிய பூர்வாங்கங்கள்.
3—6—82 வியாழன், தருமை ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி மகோற்சவ துவஜாரோஹணம்.
4—6—82 வெள்ளி, வைத்தீசுவரன்கோயில், ஆச்சாள்புரம் முதலிய இடங்களில் வைசாக உற்சவ தீர்த்தம், பிரதோஷம்.
6—6—82 ஞாயிறு, பௌர்ணமிவிரதபூஜை, மாதபூஜையில் சந்தனம் சாத்துதல், சீகாழி திருஞானசம்பந்தருக்கு ரக்ஷாபந்தனம்.
7—6—82 திங்கள், தருமை ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி சகோபுர ரிஷப வாகனக்காட்சி. ஆச்சாள்புரம் ஸ்ரீ தோத்திரபூர்ணாம்பிகா உடனுகிய ஸ்ரீ திருஞானசம்பந்தருக்கு திருக்கல்யாணம். இரவு 4 மணிக்குமேல் ஜோதி தரிசனம், ஐக்கியம்.
8—6—82 செவ்வாய், சீகாழி, காரைக்கால் தருமபுரம் முதலிய இடங்ளில் ஸ்ரீ திருஞானசம்பந்தர் அபிஷேகம், ஐக்கியம், திருக்கடவூர் ஸ்ரீ முனீசுவரபூஜை. மதுரையாதீனத்தில் ஸ்ரீ திருஞானசம்பந்தர் குருபூஜை.
9—6—82 புதன், தருமை ஸ்ரீஞானம்பிகைஉடனுகியஸ்ரீஞானபுரீசுவர சுவாமி திருக்கல்யாண வைபவம். வெள்ளிரதக்காட்சி. திருப்பனந்தாள் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மாகேசுவர [பூஜை.
10—6—82 வியாழன், சங்கடஹரசதுர்த்தி.
11—6—82 வெள்ளி. தருமை ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருத்தேர்.
12—6—82 சனி, தருமை ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி மகோற்சவத் தீர்த்தம், தருமையாதீன ஸ்தாபகர் ஸ்ரீலஸ்ரீ ஆதிகுருஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை. மாலை 26-வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிகஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் காவிரியில் திருமஞ்சனம்செய்து குருமூர்த்தங்களை வழிபடுதல். இரவு திருமெஞ்ஞானப் பாவாடையுடன் குருபூஜை வழிபாடு. ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி துவஜாவரோஹணம்.
13—6—82 ஞாயிறு, தருமையாதீன மடாலயத்தில் மாகேசுவரபூஜை. இரவு 26-வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகள் பட்டினப்பிரவேசம்.
14—6—82 திங்கள், காளாஷ்டமி.

GNANASAMBANDAM Regd. No Tn / MM 1

Printed & Published by V. Ramaiah Pillai, Managar, Dharmapuram at tha Gnanasambandam Press Dharmapuram, Mayuram. 10-5-82